

# எல்ஜிபிடி+ நபர்களை பாதிக்கின்ற சட்டங்களும் கொள்கைகளும்

# தொகுதி 03

இலங்கையில் எல்ஜிபிடிூ நபர்களை பாதிக்கின்ற சட்டங்களும் கொள்கைகளும்

# கண்ணோட்டம்

பாலீர்ப்பு, பாலின அடையாளம் மற்றும் வெளிப்பாடு, அத்தோடு பால் பண்புகள் (SOGIESC) ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடானது, சமத்துவத்திற்கான மற்றும் பாகுபாடின்மைக்கான உரிமையை மீறுகின்றது. எவ்வாறாயினும், இலங்கையில் எல்ஜிபிடி+ மக்கள் தொடர்பான பாகுபாடான சட்டங்களும், சில இடங்களில் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய சட்டப்பிரிவுகளும் உள்ளன.

இலங்கையில் எல்ஜிபிடி+ மக்களுக்கு எதிரான பாகுபாட்டை காட்டுகின்ற சட்டங்கள் முறையே 'இயற்கையின் நியதிக்கு மாறான குற்றங்கள்' அத்தோடு 'தனிநபர்களுக்கு இடையிலான பாரதூரமான இழிசெயல்' என்று பெயரிடப்பட்ட தண்டனைச்சட்டக்கோவையின் பிரிவு 365 மற்றும் பிரிவு 365A ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இந்த சட்டங்கள் மாறுபட்ட பாலீர்ப்பு கொண்ட மக்களுக்கு எதிரான பாகுபாட்டை காட்டுகின்றன. 'வேறுநபரை போல் ஆள்மாறாட்டம்' என்கின்ற 399ஆவது பிரிவு மாற்றுப்பாலின மக்களை கைதுசெய்வதற்காக பயன்படுத்தப்படுகின்றது. அலைந்துதிரிபவர்கள் கட்டளைச்சட்டமானது எல்ஜிபிடி+ சமூகங்களை சேர்ந்தவர்களை, மற்றும் குறிப்பாக பாலியல் தொழிலில் உள்ளவர்களை கைதுசெய்வதற்கு பயன்படுத்தப்படுகின்றது. சமத்துவம் மற்றும் பாகுபாடின்மைக்கான உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கின்ற பொழுதிலும், 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின், 16ஆவது உறுப்புரை, அத்தகைய சட்டங்கள் அடிப்படை உரிமைகளை மீறுகின்ற பொழுதுகூட, அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தநேரத்தில் இருந்த அனைத்து எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத சட்டங்களும் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும் என்று கூறுகின்றது. அதே நேரத்தில் சட்ட மீளாய்விற்கு இலங்கையின் அரசியலமைப்பு அனுமதிக்கவில்லை. இதன் விளைவாக, எல்ஜிபிடி+ மக்களுக்கு எதிரான பாகுபாட்டை காட்டுகின்ற சட்டங்களை பாராளுமன்றத்தால் மட்டுமே மாற்றமுடியும்.

இந்த தொகுதி எல்ஜிபிடி+ மக்களுக்கு பாகுபாட்டை காட்டுகின்ற சட்டங்கள் உட்பட பொருத்தமான சட்டங்களை பற்றி கலந்துரையாடுகின்றது. இந்த தொகுதி பால் மற்றும் பாலியல் வன்முறை, மற்றும் எல்ஜிபிடி+ மக்களுக்கு எதிரான பாகுபாட்டை காட்டுகின்ற சட்டங்கள், பாலியல் தொழில் தொடர்பான சட்டங்கள், அத்தோடு இலங்கையில் கைது தொடர்பான சட்டப்பிரிவுகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது.

# இணைய குறிப்பு

தொகுதி 3 மற்றும் விளக்கக்காட்சியின் இணைய பதிப்பை அணுக,
கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்:

அல்லது உங்கள் உலாவியில் கீழே உள்ள URL இணைப்பை தட்டச்சு செய்யவும்.

## www.shorturl.at/cnt58

# அமர்வு திட்டம்

நேரம் : மு.ப 09:00 - பி.ப 05:00 (6 மணித்தியாலங்கள்)

| ஆரம்பிக்கின்ற நேரம் | ஒதுக்கப்பட்ட நேரம் | அமர்வு |
|---|---|---|
| மு.ப 09:00 | 15 நிமிடங்கள் | மீட்டல் / அறிமுகம் |
| மு.ப 09:15 | 20 நிமிடங்கள் | அமர்வு 01: சட்டத்தை இயற்றுதல்<br>சட்டத்தின் நோக்கம், சட்டத்தின் தன்மை மற்றும் சட்டத்தின் ஆதாரங்கள் பற்றிய ஒரு கலந்துரையாடல் |
| மு.ப 09:35 | 1 மணித்தியாலம் 40 நிமிடங்கள் | அமர்வு 02: பால் மற்றும் பாலியல் வன்முறை பற்றிய சட்டங்கள்<br>விளக்கக்காட்சி மற்றும் கேள்வி பதில் |
| மு.ப 11:15 | 15 நிமிடங்கள் | இடைவேளை |
| மு.ப 11:30 | 1 மணித்தியாலம் | அமர்வு 03: செயற்பாடு – பால் மற்றும் பாலியல் வன்முறை பற்றிய சட்டங்கள்<br>ஒரு பொருத்தும் செயற்பாடு மற்றும் கலந்துரையாடல் |
| பி.ப 12:30 | 1 மணித்தியாலம் | மதிய நேர இடைவேளை |
| பி.ப 01:30 | 30 நிமிடங்கள் | அமர்வு 04: எல்ஜிபிடி+ மக்களை துன்புறுத்துகின்ற அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டமும் வேறு சட்டங்களும்;<br>வட்டவடிவிலான ஒரு கலந்துரையாடல் |
| பி.ப 02:00 | 30 நிமிடங்கள் | அமர்வு 05: பாலியல் தொழில் தொடர்பாக இலங்கையிலுள்ள சட்டங்கள்<br>விளக்கக்காட்சி மற்றும் கேள்வி-பதில் |
| பி.ப 02:30 | 1 மணித்தியாலம் | அமர்வு 06: அடுத்து என்ன நடக்கும்?<br>இரண்டு குறுநாடகங்கள் மற்றும் ஒரு கலந்துரையாடல் |
| பி.ப 03:30 | 15 நிமிடங்கள் | இடைவேளை |
| பி.ப 03:45 | 30 நிமிடங்கள் | அமர்வு 07: கைது தொடர்பான சட்டங்கள் மற்றும் நடைமுறைகள்<br>விளக்கக்காட்சி மற்றும் கேள்வி பதில் |
| பி.ப 04:15 | 30 நிமிடங்கள் | அமர்வு 08: உடன்படுகின்றீர்களா அல்லது உடன்படவில்லையா?<br>செயற்பாடு மற்றும் கலந்துரையாடல் |
| பி.ப 04:45 | 15 நிமிடங்கள் | முடிவுறுத்துதல் மற்றும் இறுதிக் கருத்துக்கள் |

## அமர்வு 01: சட்டத்தை இயற்றுதல்

*குழுக்கள் சட்டத்தின் நோக்கம், சட்டத்தின் தன்மை மற்றும் சட்டத்தின் ஆதாரங்கள் பற்றிய அவர்களுடைய கலந்துரையாடல்களை மீண்டும் தெரிவிக்கின்றன.*

### நேரம்

20 நிமிடங்கள்

### இலக்கு குழு

ஒரு அமர்வில் சுமார் 30 பங்கேற்பாளர்கள்

### குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களினால்:

- சட்டம் என்பது மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்பு என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.
- சட்டம் காலப்போக்கில் உருவாகின்றது, சூழல்களில் வேறுபடுகின்றது மற்றும் சட்டமானது மாறுபடக்கூடியது என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.
- சட்டத்தின் ஆதாரங்களை அடையாளம்காண முடியும்.

### தேவையான கருவிகள்

- ஒவ்வொரு குழுவிற்குமான பேனா மற்றும் காகிதம்
- பங்கேற்பாளர்களுக்கு காட்டுவதற்காக அரசியலமைப்பு மற்றும் முக்கிய சட்டதிட்டங்கள் (தண்டனைச்சட்டக்கோவை, சிவில் மற்றும் குற்றவியல் நடைமுறைச்சட்டங்கள், வழக்குத்தீர்ப்பு தொகுப்புக்கள், தொடர்புபட்ட சட்டங்கள்)

### தயாரிப்பு

- ஸ்லைடுகள்

### படிமுறைகள்

- மனிதர்களாகிய நாம் பிறப்பு முதல் இறப்பு வரை நாட்டின் சட்டத்தினால் ஆளப்படுகின்றோம் என்பதை விளக்குவதன் மூலம் தொடங்கவும். நமது பிறப்பையும் அத்தோடு நமது இறப்பையும் எவ்வாறு பதிவுசெய்வது என்பதை விளக்குகின்ற ஒரு சட்டம் இருக்கின்றது. சட்டங்கள் போக்குவரத்து விதிகள், உணவு பாதுகாப்பு, கல்வி விதிகள், வேலைவாய்ப்பு, சொத்து உரிமை போன்றவற்றை விவரிக்கின்றன. சட்டமானது எங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை, எங்களுடைய உடல் மற்றும் எங்களுடைய உறவுமுறைகளை பாதிக்கின்றது. ஆகவே, சட்டம் குறித்து விழிப்புடன் இருப்பது முக்கியமாக இருக்கின்றது.

- இந்த செயற்பாடு சட்டத்தை பற்றிய சில அடிப்படை கருத்துக்களை புரிந்துகொள்வதற்கான ஒரு முயற்சியாக இருக்கின்றது என்பதை விளக்கவும்

- பங்கேற்பாளர்களை 5 குழுக்களாக பிரிக்கவும் (ஒரு குழுவில் பங்கேற்பாளர்கள் அண்ணளவாக). ஒவ்வொரு குழுவையும் தங்களுக்குள் கலந்துரையாடுவதற்கும் மற்றும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள கேள்விகளில் ஒன்றுக்கான பதிலை குறிப்பிடுவதற்கும் அழைக்கவும்.
    1. சட்டம் இல்லாவிட்டால் என்ன நடக்கும்?
    2. நீங்கள் சட்டத்தை எங்கே காணலாம்?
    3. சட்டத்தை இயற்றுவது யார்?
    4. கடந்த காலத்தில் சட்டபூர்வமாக இருந்து இப்பொழுது உலகத்தில் எங்கேயாகிலும் சட்டவிரோதமாக இருக்கின்ற ஏதாவது செயற்பாடுகள் இருக்கின்றனவா?
    5. கடந்த காலத்தில் சட்டவிரோதமாக இருந்து இப்பொழுது உலகத்தில் எங்கேயாகிலும் சட்டபூர்வமாக இருக்கின்றதென நீங்கள் நினைக்கின்ற ஏதாவது செயல்கள் இருக்கின்றனவா?

- பங்கேற்பாளர்களை அவர்களின் கலந்துரையாடலிலிருந்து குறிப்புக்களை பகிர்ந்துகொள்வதற்கு அழைக்கவும்.

**சுருக்கம்**

சட்டம் இல்லையென்றால், கொலை, திருட்டு, பாலியல் வன்புணர்வு போன்ற குற்றங்களிலிருந்து எம்மை பாதுகாப்பதற்கு எதுவும் இருக்காது. குழப்பமாக இருக்கும் அத்தோடு ஒவ்வொரு நபரும் தங்களை தாங்களே காப்பாற்றிக்கொள்ள நேரிடும். அத்தகைய ஒரு சமூகத்தில், தகுதியானவர்கள் மட்டுமே தப்பிப்பிழைப்பார்கள். பாதிப்பு ஏற்படக்கூடிய நபர்களுக்கு பாதுகாப்பு இருக்காது. மற்றவர்களின் சார்பாக யார் தலைமை வகிக்க வேண்டும் அல்லது யார் தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று சொல்வதற்கு வழி இருக்காது : மக்கள் அதிகாரத்திற்காக போராடுவார்கள். எங்களுடைய குடும்பத்தை யாராவது கொலை செய்தாலோ அல்லது எங்களுடைய உடைமைகளை திருடினாலோ எந்த தீர்வும் இருக்காது.

ஆகவே, பிற மக்கள், அமைப்புக்கள் மற்றும் அரசாங்கத்திடம் இருந்தும்கூட மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை பாதுகாப்பதற்கு சமூகங்கள் சட்ட முறைமைகளை கொண்டிருக்கின்றன. அரசாங்கம் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதையும் சட்டம் விளக்குகின்றது. சட்டத்தை அமுல்படுத்துவதற்கு, சட்டமானது சட்டத்தை மீறுபவர்களுக்கான தண்டனைகளை கொண்டிருக்கின்றது. குற்றவாளிகளை தண்டிப்பதன் மூலமும், மற்றும் இழப்பீடு, பிற சீர்திருத்த நடவடிக்கைகள் மூலமும், குற்றங்களிலிருந்து பிழைப்பவர்களுக்கு சட்டமானது ஒரு நியாயமான உணர்வை/ நீதியை அளிக்கின்றது.

இலங்கையில் அரசியலமைப்பு, நியதிச்சட்டங்கள், நீதித்துறை முந்தைய தீர்ப்புக்கள் மற்றும் சில வேளைகளில் வழக்காறுகள் கூட சட்டத்தின் மூலங்களாகும். நாடு எவ்வாறு ஆட்சிசெய்யப்படவேண்டும் என்பதை அரசியலமைப்பு முதன்மையாக விளக்குகின்றது: இது அரசாங்கத்தின் வேறுபட்ட அங்கங்கள் (நிர்வாகம், பாராளுமன்றம் மற்றும் நீதித்துறை), அடிப்படை உரிமைகள் மற்றும் அரசின் கோட்பாடுகள் என்பவற்றுக்கு இடையிலான உறவுகளை விளக்குகின்றது.

சட்டங்கள் எனப்படுபவை பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட எழுதப்பட்ட சட்டங்களாகும்: தண்டனைச்சட்டக்கோவை, சான்று கட்டளைச்சட்டம் மற்றும் முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டம் ஆகியவை சட்டங்களுக்கு உதாரணங்களாகும். (குறிப்பு - இந்த கட்டத்தில், பயிற்சிவழங்குநர்

பங்கேற்பாளர்களிடையே அரசியலமைப்பு மற்றும் சட்டங்களின் பிரதிகளை விநியோகிக்கலாம். அமர்வின் முடிவில், நீங்கள் பிரதிகளை/ நகல்களை சேகரித்துக்கொள்ளலாம்.) ஒரு கட்டளைச்சட்டத்திற்கும் ஒரு சட்டத்திற்கும் என்ன வித்தியாசம்? கட்டளைச்சட்டம் என்பது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு எழுத்துபூர்வமான சட்டமாகும். அத்தோடு சட்டம் என்பது அண்மையில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டமாக இருக்கின்றது. சில நாடுகளை போலல்லாது, இலங்கையில் நீதிபதிகளால் சட்டமானது தவறாகவோ அல்லது காலாவதியாகிவிட்டதாகவோ உணர்ந்த பொழுதிலும்கூட அவர்களால் சட்டங்களை இயற்றவோ அல்லது மாற்றவோ முடியாது. ஆனால், அவர்கள் உயர் அதிகாரத்துடனான நீதிமன்றங்களின் முந்தைய முடிவுகளை பின்பற்ற வேண்டும். இதுவே நீதித்துறை முன்னோடி என்று அழைக்கப்படுகின்றது. அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த பொழுது இருந்த அனைத்து சட்டங்களும் எழுதப்படாத சட்டங்கள் உட்பட தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கின்றன என்று 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு கூறுகின்றது. இப்படித்தான் இலங்கையில் வழக்காறுகள் கூட சட்டத்தின் மூலங்கள் ஆகின.

இலங்கையில், முதன்மையாக சட்டத்தை இயற்றுவது பாராளுமன்றமாக இருக்கின்றது. அரசியலமைப்பின் அல்லது ஏதாகிலும் சட்டத்தின் முழு அல்லது பகுதியை இயற்றுவதற்கு, மாற்றுவதற்கு அல்லது ரத்துசெய்வதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இருக்கின்றது. அரசியலமைப்பின் சில முக்கியமான பகுதிகளை மாற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படலாம். பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனநாயக செயன்முறையின் படி தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இலங்கையில், ஒவ்வொரு தகுதியான வயதுவந்தவரும் பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கு வாக்களிக்க வேண்டும். உறுப்பினர்கள் அவர்களுடைய வாக்காளர்களை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் அத்தோடு குடிமக்களின் சார்பாக முடிவுகளை எடுக்க வேண்டும். இதுவே மறைமுக/ நேரடியற்ற ஜனநாயகம் என்று அழைக்கப்படுகின்றது. அரசாங்கத்தின் இந்த மாதிரியில், பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதன் மூலம், குடிமக்கள் சட்டத்தை இயற்றுகின்ற செயன்முறைக்கு பங்களிக்கின்றார்கள்.

தொடர்ந்து வளர்ந்துவருகின்ற உலகின் சவால்களை காட்டுவதற்கு/ எதிர்கொள்வதற்கு சட்டமானது தொடர்ந்தும் உருவாகின்றது. இணையத்திற்கு முன்பு, சைபர்-குற்றம் அல்லது சைபர்/ இணையவழி சுரண்டல் போன்றவற்றை நிர்வகிக்கின்ற சட்டங்கள் இருக்கவில்லை. சட்டங்கள் நாட்டிற்கு நாடு மாறுபடுகின்றன. ஒரு காலத்தில் சட்டபூர்வமாக இருந்த விடயங்கள், இப்பொழுது சட்டவிரோதமாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, உங்களுடைய துணைவரை அடிப்பது குடும்ப வன்முறை சட்டங்களுக்கு முன்பு சட்டபூர்வமானது. அடிமைத்தனம் மற்றும் அடிமை வர்த்தகம் சட்டபூர்வமாக இருந்தது. நிறவெறியின் பொழுது இனப்பாகுபாடு சட்டபூர்வமாக இருந்தது. நாஜி ஆட்சிக்காலத்து படுகொலைகளின் பொழுது யூதர்களை சித்திரவதை செய்வது மற்றும் கொல்வது சட்டபூர்வமானதாக இருந்தது. சமூகத்தின் ஏதாவது ஒரு புரிதல் மாறுகின்ற பொழுது, சட்டங்கள் உருவாகின்றன.

இலங்கையில் கண்டியை சேர்ந்த ஒரு பெண்மணி இரண்டு கணவர்மார்களை திருமணம் செய்வது சட்டபூர்வமாக இருந்தது. இலங்கை காலனித்துவப்படுத்தப்பட்ட பொழுது, பல தாராளவாத சட்டங்கள் காலனித்துவ ஆட்சியாளர்களின் நெறிகளுக்கேற்ப மாற்றப்பட்டன. இலங்கையில் ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான பாலியல் உறவை சட்டவிரோதமாக்கியது

காலனித்துவ ஆட்சியாளர்களான ஆங்கிலேயர்கள் ஆவர்.

இதேபோல, ஒருகாலத்தில் சட்டவிரோதமாக இருந்த விடயங்கள் இப்பொழுது சட்டபூர்வமாக இருக்கின்றன. இங்கிலாந்தில், ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான பாலியல் உறவு இப்பொழுது சட்டபூர்வமானதாக இருக்கின்றது. பெண்கள் வாக்களிப்பது சட்டவிரோதமாக இருந்தது. அமெரிக்காவில், 1920 களில் மதுவிலக்கு காலத்தில் மதுசாரம் சட்டவிரோதமானது மற்றும் 1967 வரை இனங்களுக்கிடையிலான திருமணம் சட்டவிரோதமானது.

மனிதர்கள் மற்றும் நவீன சவால்களை பற்றிய நமது ஆழ்ந்த புரிதலுக்கு இடமளிக்கின்ற வகையில் சட்டங்கள் உருவாக வேண்டுமென்பதனால், தற்பொழுது இருக்கின்ற சட்டங்கள் நுணுக்கமாக ஆராயப்பட வேண்டும். சட்டங்கள் மக்களால் நிர்ணயிக்கப்படுகின்ற அத்தோடு மக்களால் மாற்றப்படக்கூடிய தராதரங்களாக இருக்கின்றன.

## அமர்வு 02: பால் மற்றும் பாலியல் வன்முறை பற்றிய சட்டங்கள்

*குழுக்களில், பங்கேற்பாளர்கள் பயிற்சி வழங்குநருக்கான கேள்விகளை பட்டியலிடுகின்றார்கள், அத்தோடு பயிற்சி வழங்குநர் சிறியதொரு விரிவுரையின் மூலம் கேள்விகளுக்கு பதிலளிக்கின்றார்.*

### நேரம்

1 மணித்தியாலம் 40 நிமிடங்கள்

### இலக்கு குழு

ஒரு அமர்வில் சுமார் 30 பங்கேற்பாளர்கள்

### குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களினால்:

- ஒரே பாலின இணையர்கள் இடையிலான பாலியல் உறவு அத்தோடு பாலியல் வன்முறை தொடர்பான சட்டங்களை அடையாளம் காண முடியும்.
- பாலுறவு மற்றும் பாலியல் வன்முறையை வேறுபடுத்த முடியும்.

### தேவையான கருவிகள்

- ஒவ்வொரு குழுவிற்கும் பிளிப்சார்ட் காகிதம் மற்றும் மார்க்கர்கள்/ குறிப்பான்கள்

### தயாரிப்பு

- ஸ்லைடுகள்

### படிமுறைகள்

- இந்த அமர்வில், பங்கேற்பாளர்களுக்கு பல்வேறு SOGIESC உள்ளவர்களை பாதிக்கின்ற சட்டங்களை பற்றி நீங்கள் தெரியவைக்க முயற்சிப்பீர்கள் என்பதை விளக்கவும். பங்கேற்பாளர்கள் சட்டங்களை பற்றி ஆர்வமாக இருக்க வேண்டும் என்றும் அத்தோடு இந்த கேள்விகளை ஒரு பாதுகாப்பான இடத்தில் கேட்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கின்றது என்றும் குறிப்பிடவும்.
- பங்கேற்பாளர்களை 6 குழுக்களாக பிரிக்கவும் (ஒரு குழுவில் அண்ணளவாக 5 பங்கேற்பாளர்கள்). மற்றும் ஒவ்வொரு குழுவிற்கும் ஃபிளிப்சார்ட் காகிதம் மற்றும் மார்க்கர்களை/ குறிப்பான்களை வழங்கவும்.
- ஒவ்வொரு குழுவையும் தங்களுக்குள் கலந்துரையாட அழைக்கவும் அத்தோடு பின்வரும் கருப்பொருள்களில் ஒன்று தொடர்பாக அவர்கள் பதில் தெரிந்துகொள்ள விரும்புகின்ற 4 கேள்விகளையும் எழுதுமாறு கூறவும். உங்களிடமுள்ள வரையறுக்கப்பட்ட நேரத்தை கருத்தில் கொண்டு, ஒவ்வொரு குழுவும் தங்களுக்கு மிகவும் ஆர்வமாக இருக்கின்ற 4 கேள்விகளுக்கு முன்னுரிமை அளிக்கலாம், ஆனால் அவர்கள் இன்னும் பதில் அறிய விரும்புகின்ற கேள்விகள் அதிகமாக இருந்தால், அவர்கள் கூடுதல் கேள்விகளையும் எழுதலாம். இந்த பயிற்சிக்காக பங்கேற்பாளர்களுக்கு 10 நிமிடங்கள் கொடுக்கவும்.

- கருப்பொருள்கள்:
    1. ஒரே பாலின இணையர்களை பாதிக்கின்ற சட்டங்கள்
    2. திருநர்களை பாதிக்கின்ற சட்டங்கள்
    3. பாலியல் வன்முறை பற்றிய சட்டங்கள்

- ஒரே தலைப்பில் இரண்டு குழுக்கள் வேலை செய்வார்கள். அவர்கள் பட்டியலிட்ட கேள்விகளையும் அத்தோடு அவர்கள் ஏன் அந்த கேள்விகளை பட்டியலிட்டார்கள் என்பதனையும் முன்வைப்பதற்கு முதல் இரண்டு குழுக்களையும் அழைக்கவும். சிறியதொரு விரிவுரையின் மூலம், இந்த கேள்விகளுக்கு நீங்கள் பதிலளிப்பதற்கு முயற்சிப்பீர்கள் என்பதை விளக்கவும். ஸ்லைடுகளின் உதவியுடன் கருப்பொருள் 1 இல் சிறியதொரு விரிவுரையினை நடாத்தவும்.

- அடுத்த இரண்டு குழுக்களை தங்களுடைய கேள்விகளை முன்வைப்பதற்கு அழைக்கவும், அத்தோடு ஒவ்வொரு கருப்பொருளுக்கும் சாத்தியமான கேள்விகளையும் மற்றும் பதில்களையும் கீழே உள்ள 'குறிப்புக்கள்' இல் காணமுடியும்.

- நீங்கள் தயார் செய்யாத கேள்விகளும் இருக்கலாம் என்பதை குறித்துக்கொள்ளவும். உங்களுடைய அறிவிலிருந்து இந்த கேள்விகளுக்கு உங்களால் பதிலளிக்க முடியாவிட்டால், சரியான பதிலை பற்றி நீங்கள் நிச்சயமற்றவர்/ தெரியாதவர் என்பதை பங்கேற்பாளர்களுக்கு தெரியப்படுத்தவும் அத்தோடு அவர்களுக்கு அதே நாளுக்குள் பதிலை கண்டுபிடித்துக்கொடுக்கவும்.

## குறிப்புக்கள்

ஒரே பாலின இணையர்கள் தொடர்பான சட்டம் அத்தோடு உங்களிடம் கேட்கப்படக்கூடிய கேள்விகள் பற்றிய சிறு விரிவுரைக்கான குறிப்புக்கள் பின்வருமாறு இருக்கின்றன.

இலங்கையில் ஒரே பாலின இணையர்களுக்கிடையிலான புணர்வு சட்டவிரோதமாக இருக்கின்றதா?
இலங்கையில் ஒரே பாலின இணையர்களுக்கிடையிலான புணர்வு சட்டவிரோதமானது. இலங்கையில், ஒரே பாலின இணையர்களுக்கிடையிலான பாலியல் உறவு தொடர்பான சட்ட ஏற்பாடுகள் தண்டனைச்சட்டக்கோவையின் பிரிவு 365 மற்றும் பிரிவு 365A இன் கீழ் கூறப்படுகின்றன. 1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க தண்டனைச்சட்டக்கோவை (திருத்தம்) மூலம் தண்டனைச்சட்டமானது மாற்றப்பட்டது. இந்த மாற்றத்திற்கு முன்பு, சட்டமானது தன்பாலீர்ப்பு ஆண்களுக்கு மட்டுமே பொருந்தும். திருத்தமானது பாலின நடுநிலையை உருவாக்குவதற்காக சட்டத்தின் மொழியை மாற்றியது, ஆகவே, இப்பொழுது ஒரே பாலின இணையர்களான ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்த சட்டம் பொருந்துகின்றது. சட்டம் அரிதாகவே செயற்படுத்தப்படுகின்றது. ஆனால் இது நாட்டிலுள்ள எல்ஜிபிடி+ மக்கள் இரண்டாம்தர அணுகுமுறையை பெறுகின்றனர் என்பதன் நினைவூட்டலாகும்.

பிரிவு 365: 'இயற்கையின் நியதிக்கு மாறான குற்றம்'
தண்டனைச்சட்டக்கோவை பின்வருமாறு கூறுகின்றது:
"எந்த ஆணோ, பெண்ணோ அல்லது விலங்கோ இயற்கையின் நியதிக்கு மாறாக

தானாக முன்வந்து உடலுறவில் ஈடுபடுகின்றாரோ, அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்படும்..."

16 வயதிற்குட்பட்ட – (சட்டபூர்வ ஒப்புதல் வயது) ஒரு நபருடன் புணர்வு கொண்டால் அதிக தண்டனையை தண்டனைச்சட்டக்கோவை வழங்குகின்றது.

**ஒப்புதல் வயது என்றால் என்ன?**
ஒரு சிறுவர் புணர்வுக்கு ஒப்புதல் அளிப்பதற்கு தகுந்த வயதாகும். இலங்கையில் தற்பொழுது இந்த வயது 16ஆக இருக்கின்றது. இதற்கு அர்த்தமானது, 16 வயதுக்கு கீழுள்ள எவருக்கும் புணர்வுக்கு ஒப்புதல் அளிக்கின்ற அளவுக்கு வயதாகவில்லை என்பதாகும். ஆகவே, சிறுவரே அவர்களுக்கு புணர்வு வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறினாலும்கூட, 16 வயதிற்குட்பட்ட சிறுவருடன் புணர்வு கொள்வது பாலியல் பலாத்காரமென கொள்ளப்படுகின்றது. ஏனென்றால், சிறுவருக்கு புணர்வின் இயல்பு மற்றும் விளைவுகளை புரிந்துகொள்கின்ற வயது இல்லையென்றும் அத்தோடு சட்டபூர்வமாக ஒப்புதல் அளிப்பதற்கு தகுதியற்றவராக இருக்கின்றார் என்றும் கருதப்படுகின்றது.

எதிர்ப்பாலீர்ப்பு உள்ளவர்களுக்கு இடையிலான பாலியல் செயல்கள் உட்பட - குத புணர்வு போன்ற இனப்பெருக்கத்திற்கு வழிவகுக்காத பாலியல் புணர்வை உள்ளடக்கியதாக "இயற்கையின் நியதிக்கு மாறான புணர்வு" கோட்பாட்டளவில் விளக்கப்படுகின்ற பொழுதிலும் - இந்த விடயம் ஒரே பாலினத்தை சேர்ந்த தனிநபர்களுக்கு இடையிலான பாலியல் செயல்களுக்கு பொருந்தும் என்று பரவலாக புரிந்துகொள்ளப்படுகின்றது.

சட்டத்தில் 'புணர்வு' என்பது வரையறுக்கப்படவில்லை. ' புணர்வு ' பொதுவாக ஒரு செருகுகின்ற அல்லது 'ஊடுருவுகின்ற' பாலியல் செயலாக புரிந்துகொள்ளப்படுகின்றது.

**பிரிவு 365A: தனிநபர்களுக்கு இடையிலான பாரதூரமான இழிசெயல்கள்**
இந்த பிரிவில், தண்டனைச்சட்டக்கோவை பின்வருமாறு குறிப்பிடுகின்றது:
"எந்தவொரு நபரும், பொது இடத்தில் அல்லது தனி இடத்தில், இன்னொரு நபருடன் எந்தவொரு பாரதூரமான இழிசெயலையும் புரிந்தால் அல்லது அச்செயலின் பங்காளராக இருந்தால் அல்லது அச்செயலை தூண்டினால், அல்லது தூண்டுவதற்கு முயற்சி செய்தால் குற்றம் செய்தவராக கருதப்படுவார்."

இந்த பிரிவு பாலியல் 'புணர்வு' க்கு குறைவாக இருக்கின்ற பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக தன்பாலீர்ப்பாளர்களை தண்டிப்பதற்கு பயன்படுத்தப்படலாம். இது முத்தமிடுதல் அல்லது பாலியல் உறுப்புகளை தொடுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்கியதாக விளக்கப்படலாம்.

இந்த இரண்டு பிரிவுகளும் (அதாவது பிரிவு 365 மற்றும் பிரிவு 365A) தனிப்பட்ட ரீதியிலும் ஒப்புகின்ற வயதுக்கு வந்தவர்களுக்கு இடையிலான பாலியல் செயற்பாடுகளை குற்றமாக கருதுகின்றது.

பிரிவு 365 மற்றும் 365A எதிர்ப்பாலீர்ப்பு உள்ளவர்களுக்கு பொருந்துமா?

கோட்பாட்டில், இந்த சட்டங்கள் பாலீர்ப்பினை பொருட்படுத்தாமல் மக்களின் ஒப்புதலுடனான பாலியல் நடத்தைகளுக்கும் பொருந்தும். எவ்வாறாயினும், நடைமுறையில் இந்த சட்டங்கள் ஒரே பாலின இணையர்களுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன.

**அடிப்படை உரிமைகள் குறித்த சட்டம் பல்வேறுபட்ட பாலீர்ப்பினை கொண்ட மக்களை பாதுகாக்கின்றதா?**

இலங்கையிலுள்ள அனைத்து மக்களுக்கும் அடிப்படை உரிமைகள் பொருந்தும். அரசியலமைப்பின் 12 வது உறுப்புரை, 'சட்டத்தின் முன்பாக அனைத்து நபர்களும் சமமானவர்கள் அத்தோடு சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு உரித்தானவர்கள்' என்றும் அத்தோடு இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கருத்து, பிறந்த இடம் அல்லது ஏதேனும் ஒரு அடிப்படையில் எந்த குடிமகனுக்கும் பாகுபாடு காட்டப்படக்கூடாது' என்று கூறுகின்றது. ஆகவே, எதேச்சதிகார கைது, பேச்சு சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம், ஒருங்கமைக்கும் சுதந்திரம், தொழில் சுதந்திரம் அத்தோடு நடமாடும் சுதந்திரம் போன்ற அடிப்படை உரிமைகள் எல்ஜிபிடி+ மக்களுக்கும் பொருந்தும்.

12 வது உறுப்புரையானது பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தை பாகுபாடின்மைக்கான காரணங்களாக வெளிப்படையாக குறிப்பிடவில்லை, ஆனால் அது 'அல்லது அத்தகைய அடிப்படையில் ஏதேனும்' போன்ற வார்த்தைகளில் குறிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், ஒரு முற்போக்கான படியாக, பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாதென்கின்ற உரிமையை 2014 ஆம் ஆண்டு ஜெனீவாவில் நடந்த மனித உரிமைகள் குழுவின் 112 வது அமர்வில் இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது:

"அரசியலமைப்பின் 12 வது உறுப்புரையானது அடிப்படை உரிமையாக இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கருத்து, பிறந்த இடம் அல்லது ஏதேனுமொரு அடிப்படையிலும் பாகுபாடின்மையை அங்கீகரிக்கின்றது. இந்த அளவுகோல் பாலீர்ப்பு அத்தோடு பாலின அடையாளங்களின் அடிப்படையில் களங்கத்திலிருந்தும் மற்றும் பாகுபாடுகளிலிருந்தும் நபர்களை பாதுகாக்கின்றது."

## வழிநடத்துனருக்கான குறிப்பு

தண்டனைச்சட்டக்கோவையானது உறுப்புரை 12 இனை மீறி, ஓரின பாலியல் செயற்பாட்டை குற்றமாக்குவதன் மூலம், எவ்வாறு பல்வேறுபட்ட பாலீர்ப்பு கொண்ட மக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுகின்றது என்பதை எடுத்துக்காட்டவும். பங்கேற்பாளர்கள் இந்த முரண்பாட்டை புரிந்துகொள்வதை உறுதிசெய்யவும். அத்தோடு அடிப்படை உரிமைகளை மீறுகின்ற இந்த சட்டங்களை மாற்றுவதற்கு பாராளுமன்றத்துடன் நாம் ஏன் பணியாற்ற வேண்டுமென்பதையும் புரிந்துகொள்ள உதவவும்.

மேலே கலந்துரையாடப்பட்ட தண்டனைச்சட்டக்கோவையின் பிரிவு 365 மற்றும் பிரிவு 365A போன்ற விதிகள் அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட சமத்துவத்திற்கான உரிமையை மீறுவதாக ஒருவர் வாதிடலாம். உண்மையில் இது ஒரு சரியான வெளிப்பாடாகும்.

எவ்வாறாயினும், தற்போதைய அரசியலமைப்பு 1978 இல் நடைமுறைக்கு வந்தவேளையில் இருந்த அனைத்து சட்டங்களும் அத்தகைய சட்டங்கள் அடிப்படை உரிமைகளை (அரசியலமைப்பின் 16 வது உறுப்புரையை பார்க்கவும்) மீறினாலும் செல்லுபடியாகும் என்று கூறுகின்றது. நீதிபதிகள் அடிப்படை உரிமைகளை மீறுவது சட்டத்திற்கு முரணானதா என்று பார்க்க சட்டங்களை மறுபரிசீலனை செய்வதற்கு அரசியலமைப்பு அனுமதிப்பதில்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சட்டத்தின் நீதி மீளாய்வு அனுமதிக்கப்படுவதில்லை. ஆகவே, அடிப்படை உரிமைகளை மீறுகின்ற சட்டங்கள் இலங்கையில் இன்னும் செயற்பாட்டில் இருக்கத்தான் செய்கின்றன. இந்த சட்டங்களை பாராளுமன்றத்தால் மட்டுமே மாற்ற முடியும். இதனால்தான் நாம் மக்கள் பிரதிநிதிகளுடனும் அத்தோடு பொது மக்களுடனும் இணைந்து பணியாற்றுவது முக்கியமாக இருக்கின்றது.

## ஒரே பாலின இணைக்கு நெருக்கமான இணையின் மூலமான வன்முறைக்கு எதிரான சட்டப்பாதுகாப்பு இருக்கின்றதா?

நெருக்கமான இணையின் வன்முறையிலிருந்து தப்பிப்பிழைப்பவர் 2005 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க (PDVA), குடும்ப வன்முறை தடுப்புச்சட்டத்தின் கீழ் ஒரு பாதுகாப்பு உத்தரவை பெற முடியும். இந்த சட்டத்தின் கீழ் 'குடும்ப வன்முறை செயற்பாடொன்று எந்தவொரு நபரை (பாதிக்கப்பட்ட நபர்) இலக்காக வைத்து நடத்தப்படுகிறதோ அல்லது நடத்தப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றதோ, அவர் நீதவான் நீதிமன்றத்தில், அவ்வாறான குடும்ப வன்முறையை தடுக்க நீதிமன்ற பாதுகாப்பு ஆணைக்கான விண்ணப்பத்தை முன்வைக்கலாம்.'
மஜிஸ்ட்ரேட்/ நீதவான் நீதிமன்றம் சாட்சிகளின் அடிப்படையில் வழக்கிற்கு தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்பு சட்டத்தின் கீழ் விண்ணப்பத்தை பெற்று 14 நாட்களுக்கு செல்லுபடியாகின்ற ஒரு இடைக்கால பாதுகாப்பு உத்தரவை பிறப்பிக்க முடியும். இது வீட்டு வன்முறையின் எந்தவொரு செயலையும் தடுப்பதற்கான அவசரத் தேவையையும், அத்தோடு பாதிக்கப்பட்ட நபரின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டுள்ளது.

நீதிமன்றம் ஆதாரங்களை ஆராய்ந்ததற்கு பின்பு, நீதிமன்றத்தால் 12 மாதங்களுக்கு செல்லுபடியாகின்ற ஒரு பாதுகாப்பு உத்தரவை பிறப்பிக்கமுடியும்.

இந்த சட்டம் ஒரு சிவில் தீர்வை வழங்குவதன் மூலம் பாதிக்கப்பட்ட நபரின் பாதுகாப்பை உறுதிசெய்வதில் கவனம்செலுத்துகின்ற பொழுது, சட்டமானது தனியான கூடுதல் சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கையை தொடங்குவதற்கான உரிமையை பாதுகாக்கின்றது.

PDVA பாலின நடுநிலை சொற்களை பயன்படுத்துகின்றது. ஆகவே, எந்தவொரு நபரும் தங்கள் பாலின அடையாளம் மற்றும் பாலீர்ப்பினை பொருட்படுத்தாமல், தங்களுடைய 'துணைவர்', 'முன்னாள் துணைவர்' அல்லது 'கூடிவாழும் துணைவர்' ஆகியோரிடமிருந்து பாதுகாப்பை கோரி ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்யமுடியும். இந்த சட்டத்தின் கீழ் உடலியல் வன்முறை அத்தோடு உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் இரண்டும் 'வீட்டு வன்முறை' ஆக கொள்ளப்படுகின்றன.

எவ்வாறாயினும், ஒரே பாலின உறவுகளில் உள்ளவர்கள் காவல்துறையின் பாகுபாட்டிற்கு அல்லது துன்புறுத்தலுக்கு பயப்படுவதால் அரிதாகவே PDVA வை நாடுகின்றார்கள்.

இலங்கையில் ஒரே பாலின இணையர்கள் திருமணம் செய்துகொள்ள முடியுமா?
இலங்கை சட்டத்தின்படி ஒரே பாலின இணையர்கள் சட்டபூர்வமாக திருமணம் செய்து கொள்ள முடியாது.

**ஒரே பாலின இணையர்கள் ஒன்றாக வாழ்வது சட்டவிரோதமானதா?**
பிரிவு 365 மற்றும் பிரிவு 365A ஆகியவை ஒரே பாலின இணையர்களுக்கிடையிலான புணர்வை குற்றமாக்கியிருந்தாலும், ஒரே பாலின இணையர்கள் (அல்லது எதிர்ப்பாலீர்ப்புள்ள இணையர்கள்) ஒன்றாக வாழ்வதை தடுப்பதற்கு எந்த சட்டமும் கிடையாது.

இலங்கையில் ஒரே பாலின இணையர்கள் குழந்தைகளை தத்தெடுக்க முடியுமா?
ஒரே பாலின இணையரின் ஒன்றிணைவை இலங்கை இன்னும் அங்கீகரிக்கவில்லை என்பதால், இணையர் ஒரு குழந்தையை தத்தெடுக்க முடியாது. எவ்வாறாயினும், இலங்கையின் சட்டம் ஒரு தனிநபருக்கு ஒரு குழந்தையை தத்தெடுப்பதற்கு அனுமதிக்கின்றது. ஆகவே, ஒரு இணையினால் ஒரு குழந்தையை சட்டப்படி தத்தெடுக்க முடியும்.

1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க குழந்தைகள் தத்தெடுப்பு கட்டளைச்சட்டப்படி, தனி/ ஒற்றை பெற்றோர்கள் தத்தெடுக்க அனுமதிக்கப்படுகின்றார்கள். எவ்வாறாயினும், ஒரு ஆண் விண்ணப்பதாரரால் ஒரு பெண் குழந்தை தத்தெடுக்கப்படுவதை சட்டம் தடுக்கின்றது. விஷேட சூழ்நிலைகள் இருந்தால் மட்டுமே இது அனுமதிக்கப்படுகின்றது.

**ஒரே பாலின இணையின் மரணத்திற்கு பிறகு எஞ்சியிருக்கும் இணைக்கு சொத்து எவ்வாறு மாறும்?**
ஒரே பாலின இணைகளின் ஒன்றிணைவை இலங்கை இன்னும் அங்கீகரிக்கவில்லை என்பதால், அதாவது ஒருவர் உயில் எழுதாமல் இறந்த பின்பு சொத்தை பகிர்ந்தளிக்கின்ற - வாரிசு என்று வருகின்ற பொழுது சட்டம் ஒரே பாலின இணைகளை கருத்தில் கொள்ளாது. ஆகவே, உயிருடன் இருக்கின்ற இணைக்கு சொத்து உரிமைகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்கு, அந்த நபர் இறப்பதற்கு முன்பு ஒரு உயில் எழுத வேண்டும்.

திருநர்கள் தொடர்பான சட்டம் பற்றிய சிறு விரிவுரைக்கான மற்றும் உங்களிடம் கேட்கப்படக்கூடிய கேள்விகளுக்கான குறிப்புக்கள் பின்வருமாறு:

**ஒரு திருநர் இலங்கையில் சட்டபூர்வமாக பாலினத்தை மாற்றமுடியுமா?**
ஆம். 2016 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சு திருநர்களுக்கு பாலின அங்கீகார சான்றிதழை (GRC) பெறுவதற்கு அரச நிறுவனங்களை உதவுமாறு கோரி ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டது. பாலின அங்கீகார சான்றிதழை பெறுவதற்கான இந்த நிர்வாக செயன்முறை பிறப்பு மற்றும் இறப்பு பதிவுக்கட்டளையின் 27 மற்றும் 52 (1) ஆவது பிரிவின் பிறப்பு சான்றிதழில் பாலினம் மற்றும் பெயரை மாற்றுகின்ற செயன்முறையின் ஒரு பகுதியாக அமைகின்றது. ஒரு திருநர் பிறப்பு சான்றிதழ் மாற்றப்பட்ட பின்பு அவர்களின் பாலினத்தை சரியாக குறிக்கின்ற தேசிய அடையாள அட்டைகள் போன்ற புதிய அடையாள ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**இலங்கையில் ஒரு திருநர் காவல்துறையினரால் கைது செய்யப்பட முடியுமா?**

இல்லை. ஒரு திருநரால் இலங்கையில் சட்டபூர்வமாக பாலினத்தை மாற்ற முடியும். எவ்வாறாயினும், தண்டனைச்சட்டக்கோவையின் 399வது பிரிவு அடிக்கடி திருநர்களை துன்புறுத்துவதற்கும், அச்சுறுத்துவதற்கும் அத்தோடு தவறாக கைதுசெய்வதற்கும்கூட பயன்படுத்தப்படுகின்றது (மற்றும் பிறப்பு ரீதியான பாலின வெளிப்பாடுகளை வெளிப்படுத்தாது அவர்களுடைய பாலுடன் ஒத்துப்போகாமல் நடக்கின்ற பொழுது - உதாரணமாக, ஆண்போல் உடையணிகின்ற பெண்களுக்கு அல்லது 'புட்ச் தன்பாலீர்ப்பு' (butch lesbians) பெண்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது').

**பிரிவு 399: 'வேறுநபரை போல் ஆள்மாறாட்டம்'**

தண்டனைச்சட்டக்கோவை பின்வருமாறு கூறுகின்றது:

"ஒரு நபர் "வேறுநபரை போல் ஆள்மாறாட்டம்" செய்து ஏமாற்ற முற்பட்டால், அவர் வேறுநபர்போல் பாவனை செய்து, ஒருவரை வேறு ஒருவர் போல வேண்டுமென்றே காண்பிக்க முற்பட்டால் அல்லது அவர் அல்லாத மற்றுமொரு நபரை பிரதிநிதித்துவம் செய்ய முற்படுதல். இந்த குற்றம் இழைக்கப்பட்ட, ஆள்மாறாட்டம் செய்து பிரதிநிதித்துவம் செய்யப்படும் நபர் உண்மையானவராகவோ அல்லது கற்பனையான ஒரு நபராகவோ இருக்கக்கூடும்."

பிரிவு எடுத்துக்காட்டுகளை வழங்குகின்றது:

"(அ) A என்கின்ற நபர் அதே பெயரில் 'ஒரு குறிப்பிட்ட பணக்கார வியாபாரியை போல நடித்து' ஏமாற்றுகின்றார். இங்கு, A என்கின்ற நபர் வேறொரு நபரை போல் ஏமாற்றுபவராவார்.

(ஆ) A என்கின்ற நபர் இறந்துபோன ஒரு நபரான B போல நடித்து ஏமாற்றுகின்றார். இங்கு, A என்கின்ற நபர் வேறொரு நபரை போல் ஏமாற்றுபவராவார்."

ஒரு நபரின் பாலின வெளிப்பாடானது 'பொதுமக்களை தவறாக வழிநடத்துகின்றது' என்ற அடிப்படையில் இந்த பிரிவு காவல்துறையினரால் பயன்படுத்தப்படுகின்றது.

**திருநர்கள் திருமணம் செய்துகொள்ள முடியுமா?**

தங்களுடைய உண்மையான பாலினத்தை குறிக்கின்ற அடையாள ஆவணங்களை பெற்ற ஒரு திருநர் எதிர் பாலினத்தை சேர்ந்த ஒரு நபரை திருமணம் செய்துகொள்ள முடியும். உதாரணமாக, பிறக்கும்பொழுதே ஆணாக பிறந்த, ஆனால் இப்பொழுது ஒரு பெண்ணாக அடையாள ஆவணங்களை பெற்றுள்ள ஒரு திருநங்கை பெண் சட்டப்படி ஒரு ஆணை திருமணம் செய்துகொள்ள முடியும்.

**நெருக்கமான இணையின் வன்முறையிலிருந்து ஒரு திருநரை பாதுகாப்பதற்கு சட்டமொன்று இருக்கின்றதா?**

ஒரு திருநர் 2005 ஆம் ஆண்டு 34 வது இலக்க குடும்ப வன்முறை தடுப்புச்சட்டத்தின் (PDVA) கீழ், நெருக்கமான இணையின் வன்முறையிலிருந்து பாதுகாப்பை பெறமுடியும்.

PDVA பாலின நடுநிலை சொற்களை பயன்படுத்துகின்றது. ஆகவே, எந்தவொரு நபரும் தங்களுடைய பாலினம், பாலின அடையாளம் மற்றும் பாலீர்ப்பு ஆகியவற்றை பொருட்படுத்தாமல், தங்களுடைய 'வாழ்க்கைத்துணை', 'முன்னாள் துணை' அல்லது கூடிவாழும் துணைவர்' ஆகிய எந்தவொரு நபரிடமிருந்தும் பாதுகாப்பு கோரி ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்யலாம். இந்த சட்டத்தின் கீழ் உடல் ரீதியான வன்முறை மற்றும் உணர்வு ரீதியான துஷ்பிரயோகம் இரண்டும் 'குடும்ப வன்முறை' ஆக கொள்ளப்படுகின்றது.
எவ்வாறாயினும், அதிக வன்முறை அச்சம் காரணமாக பல திருநர்கள் இந்த சட்டத்தின் மூலம் பயன்களை தேடுவதில்லை.

'தேவை நாடும் மகளிர்' (Women in Need) (0112 671 411/ https://www.winsl.net) நிறுவனம் PDVA வை பயன்படுத்தி பாதுகாப்பை தேடுகின்ற பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்கு இலவச சட்ட ஆதரவை வழங்குகின்றது.

**இலங்கையில் பாலின அங்கீகார சான்றிதழை பெறுவதற்கு பாலின மாற்று அறுவைசிகிச்சை செய்யவேண்டியது அவசியமாக இருக்கின்றதா?**

இல்லை. 2016 ஆம் ஆண்டு சுற்றறிக்கையின்படி, திருநர்களுக்கு '(ஒரு மாறுபட்ட) பாலினத்தவராக வாழ்வதற்கும் அத்தோடு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும்' விருப்பம் இருக்கவேண்டும், அத்தோடு 'ஒருவருடைய உடலை ஒருவருடைய விருப்பமான பாலுடன் முடிந்தவரையில் ஒத்ததாக மாற்றுவதற்கு அறுவை சிகிச்சை மற்றும் ஹோர்மோன் சிகிச்சை செய்ய வேண்டும்' என்கின்ற விருப்பமும் இருக்க வேண்டும்.
எவ்வாறாயினும், திருநர் ஆரோக்கியத்திற்கான உலக தொழிலாளர் சங்கத்தினால் (WPATH) வெளியிடப்பட்ட உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளின் படி, பாலின மாற்று செயன்முறையின் சில வடிவங்களை செய்வது அவசியமாக இருக்கின்றது. உதாரணமாக, ஹோர்மோன் சிகிச்சையை எடுத்துக்கொள்வது இதில் அடங்குகின்றது. நபரானவர் அவருடைய பாலினத்துடன் ஒத்துப்போவதற்கான பாலின வெளிப்பாடாக புரிந்துகொள்ளப்படக்கூடிய 'சமூக பாலின மாற்றத்தை' நிறைவுசெய்ய வேண்டும்.

### பயிற்சிவழங்குநருக்கான குறிப்பு

ஆகஸ்ட் 2021 இல், பாலின அங்கீகார சான்றிதழை பெறுவதில் பல நடைமுறைச்சவால்கள் காணப்பட்டன. 2016 ஆம் ஆண்டு சுற்றறிக்கையானது மனநல மருத்துவருடன் அமர்ந்திருக்கின்ற நாட்கணக்கை பரிந்துரைக்காது அல்லது மனநல மருத்துவருக்கு தெளிவான வழிமுறைகளை வழங்காது. இதன் ஒரு விளைவாக, சான்றிதழ் வழங்குவது முற்றிலும் மனநல மருத்துவரின் விருப்பப்படியே நடக்கின்றது. அதே நேரத்தில், இந்த சேவையை பெறக்கூடிய வைத்தியசாலைகள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.
தற்பொழுது, 5 அரச நிறுவனங்கள் மட்டுமே இந்த சேவையை வழங்குகின்றன, அத்தோடு 4 நிறுவனங்கள் இந்த சேவையானது சம்பந்தப்பட்ட மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுவதாகவும் கூறுகின்றன. தேசிய மனநல

நிறுவனமான, அங்கொட வைத்தியசாலை மட்டுமே நாடு முழுவதிலுமிருந்து மக்களை ஏற்றுக்கொள்கின்றது. எவ்வாறாயினும், இந்த வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறையானது ஒரு சவாலாக இருந்துவருகின்றது.

பாலியல் வன்முறை தொடர்பான சட்டத்தை பற்றியும் மற்றும் உங்களிடம் கேட்கப்படக்கூடிய கேள்விகளை பற்றியுமான சிறு விரிவுரைக்கான குறிப்புக்கள் பின்வருமாறு

ஒப்புதலும் அதன் இன்மையுமே புணர்வு மற்றும் பாலியல் வன்முறைக்கு இடையிலான முக்கிய வேறுபாடாக இருக்கின்றது என்பதை விளக்குவதன் மூலம் தொடங்குங்கள். ஒப்புதலை பற்றி விளக்குவதற்கு நீங்கள் இந்த வீடியோவை (ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கும்) இயக்கலாம்: https://www.youtube.com/watch?v=oQbei5JGiT8

**இலங்கை சட்டத்தின் கீழ் ஒரு ஆணை பாலியல் வன்புணர்வு செய்வதை தண்டிக்க முடியுமா?**

ஒரு ஆணையோ அல்லது ஒரு திருநரையோ பாலியல் வன்புணர்வு செய்வது இலங்கை சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியதாகும், ஆனால் பாலியல் வன்புணர்வு என்கிற குற்றத்தின் கீழ் அல்ல.

**பிரிவு 363: 'பாலியல் வன்புணர்வு'**

இந்த பிரிவு கூறுகின்றது:

"பின்வரும் ஏதாவது விளக்கங்களின் கீழுள்ள சூழ்நிலைகளில் ஒரு பெண்ணுடன் புணர்வு வைத்துக்கொண்ட ஆண் "பாலியல் வன்புணர்வு" செய்வதாக கூறப்படுகின்றது..."

இந்த பிரிவின் கீழ் 5 சூழ்நிலைகள் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதான இந்த 5 சூழ்நிலைகளும் பின்வருமாறு பிரிக்கப்பட்டிருக்கின்றன.

1. ஒரு பெண்ணின் ஒப்புதல் இல்லாமல்.
2. பெண்ணானவள் ஆணின் மனைவியாக இருந்து, மனைவி நீதியினால் சட்டப்படி பிரிந்துமிருந்தால், அவளுடைய அனுமதியின்றிய புணர்வு.
3. அவள் சட்டப்பூர்வமான அல்லது சட்டவிரோத தடுப்புக்காவலில் இருக்கின்றபொழுது அவளுடைய ஒப்புதலுடன்.
4. அவளுடைய ஒப்புதலை பலம் அல்லது மிரட்டல், அல்லது தடுப்புக்காவல் அச்சுறுத்தல் அல்லது மரணம் அல்லது காயம் தொடர்பாக பயப்படுத்துவதன் மூலம் பெறப்பட்ட அவளுடைய ஒப்புதலுடன்.
5. அவளுடைய மனநிலை சரியில்லாத நேரத்தில் அவள் ஒப்புக்கொள்ளுகின்ற பொழுது, அவளுடைய ஒப்புதலுடன்.
6. குறித்த ஆணாலோ அல்லது வேறு நபராலோ கொடுக்கப்பட்ட மதுசாரம் அல்லது போதைப்பொருளால் தூண்டப்பட்ட போதை நிலையில் அவள் இருந்தபொழுது, அவளுடைய ஒப்புதலுடன்.
7. குறித்த ஆணுக்கு தான் அவளுடைய கணவன் இல்லை என்று தெரிந்திருந்தும், அவன்தான் சட்டப்பூர்வமாக திருமணம் செய்துள்ள கணவன் என்று அவள் நம்புகின்ற பொழுது, அவளுடைய ஒப்புதலுடன்.
8. அவள் பதினாறு வயதிற்குள் இருக்கின்றபொழுது அவளுடைய ஒப்புதலுடன் அல்லது இல்லாமல் (குறித்த பெண் அவனுடைய மனைவியாக இல்லாதவிடத்து, உதாரணமாக முஸ்லிம் திருமணங்கள்

மற்றும் விவாகரத்து சட்டத்தின் கீழ், பன்னிரண்டு வயதுக்கு மேல்).

புணர்வை உருவாக்க ஊடுருவல் போதுமானது என்று குறித்த பிரிவு விளக்குகின்றது. எதிர்ப்பின் சான்றுகளான உடலியல் காயங்களை பாலியல் புணர்வானது ஒப்புதலின்றித்தான் நடந்தது என்பதற்காக நிரூபிக்கவேண்டிய அவசியமில்லை என்று மேலும் விளக்கப்படுகின்றது.
ஒரு ஆண் ஒரு பெண்ணை யோனி வழியாக பாலியல் வன்புணர்வு செய்கின்ற சூழ்நிலைக்கு மட்டுமே இந்த பிரிவு பொருந்துகின்றது.

**பிரிவு 365B: ' பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்'**
பிரிவு 365B பின்வருமாறு கூறுகின்றது:
பாலியல் திருப்திக்காக ஒரு நபர், தன் பால் உறுப்புக்களை கொண்டோ அல்லது உடல் உறுப்புக்கள் ஏதேனும் கொண்டோ அல்லது ஏதேனும் உபகரணங்கள் கொண்டு மற்றுமொரு நபரின் உடலில் உள்ள துளை மூலம், பிரிவு 363ன் படி பாலியல் வன்புணர்வல்லாத செயலை ஏதேனும் சந்தர்ப்பத்தில், பின்வரும் விளக்கத்திற்கமைய புரிந்தால்:
பிரிவானது 4 சூழ்நிலைகளை விவரித்தது. எளிதில் புரிந்துகொள்வதற்காக இந்த 4 சூழ்நிலைகளும் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

1. அந்த நபரின் சம்மதம் இன்றி;
2. அந்த நபரின் சம்மதம் இன்றி அல்லது சம்மதத்துடன் எனினும் அவர் 16 வயதிற்கு குறைந்தவராக இருப்பின்;
3. அந்த நபர் சட்டரீதியான அல்லது சட்டத்தினால் ஏற்படுத்தப்படாத தடுப்பில் இருக்கும் போது அவரது சம்மதத்துடன் அல்லது மிரட்டல் அல்லது பலவந்தமாக அவளை காயப்படுத்தி, மரண அச்சுறுத்தல் ஏற்படுத்தி சம்மதம் பெறப்பட்டிருந்தால்;
4. அந்த நபர் சுயநினைவில் இல்லாத போது அவரது சம்மதம் பெறப்பட்டிருப்பின் அல்லது அவர் மது அல்லது போதை பொருள் பாவித்து மயக்கமடைந்த சந்தர்ப்பத்தில் சம்மதம் வழங்கப்பட்டிருந்தால்;

இந்த பிரிவு பாலின நடுநிலை சொற்களை பயன்படுத்துகின்றது. எந்தவொரு நபரும் தங்களுடைய பாலினத்தை பொருட்படுத்தாமல் மற்றொரு நபருக்கு எதிராக இந்த குற்றத்தை செய்ய முடியும்.

ஒரு பெண்ணானவள் குத பாலியல் உறவு, கட்டாயப்படுத்தல், கட்டாய ஊடுருவும் புணர்வு ('தொடை பாலுறவு') அல்லது ஒரு பொருளை அல்லது உடலின் ஒரு பகுதியை அவளது உடலுக்குள் உட்செலுத்துதல் போன்ற பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டால், அத்தகைய செயல் பிரிவு 365B இன் கீழ் பாரிய பாலியல் துஷ்பிரயோக பிரிவின் கீழ் குற்றமாக கொள்ளப்படும்.

ஒரு ஆணோ அல்லது ஒரு திருநரோ பாலியல் வன்புணர்வு செய்யப்படுகின்ற பொழுது இதே பிரிவு பொருந்துகின்றது. இதில் குத பாலியல் உறவு, கட்டாயப்படுத்தல், கட்டாய ஊடுருவும் புணர்வு ('தொடை பாலுறவு') அல்லது ஒரு பொருளை அல்லது உடலின் ஒரு பகுதியை உடலுக்குள் உட்செலுத்துதல் போன்ற பாலியல் வன்கொடுமைகள் உள்ளடங்குகின்றன.

பிரிவு **363** மற்றும் பிரிவு **365B** களுக்கு இடையிலான வேறுபாடுகளை

கண்டறிவதற்காக பங்கேற்பாளர்களை அழைக்கவும்.

பாலியல் வன்புணர்வு குற்றமானது சில 'மோசமான சூழ்நிலைகளில்' ஒரு அதிகபட்ச தண்டனையை பிரிவு 364 இன் கீழ் கொண்டுள்ளது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள் - அதுதான் குற்றம் மிகவும் கடுமையானதாக கருதப்படுகின்றதற்கான சூழ்நிலைகளாக இருக்கின்றன. உதாரணமாக, ஒரு பொது அதிகாரி தனது காவலிலுள்ள ஒரு பெண்ணுக்கு எதிராக செய்கின்ற பாலியல் பலாத்காரம், வைத்தியசாலையில் இருக்கின்ற ஒரு பெண்ணுக்கு எதிராக வைத்தியசாலையின் நிர்வாகம் அல்லது ஒரு ஊழியர் செய்கின்ற பாலியல் பலாத்காரம், ஒரு கர்ப்பிணிப்பெண்ணை, 18 வயதுக்குட்பட்ட ஒரு பிள்ளையை, மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணை பாலியல் வன்புணர்வு செய்தல், மற்றும் கூட்டு பாலியல் வன்புணர்வு போன்றவை மிகவும் பாரதூரமான குற்றங்களாக கருதப்படுகின்றன. பிரிவு 365B தொடர்பாக 'மோசமான சூழ்நிலைகளை' அடையாளம் காணுகின்ற ஒரே பிரிவென்று எதுவுமில்லை.

**பொது போக்குவரத்தில் ஒரு நபர் தன்னுடைய பிறப்புறுப்புக்களை காண்பிப்பதற்காக குற்றம்சுமத்த முடியுமா?**
இது தண்டனைச்சட்டக்கோவையின் பிரிவு 345 இன் கீழ் பாலியல் துன்புறுத்தலுக்கு சமமானது.

**பிரிவு 345: 'பாலியல் துன்புறுத்தல்'**
"குற்றப்பலத்தை பயன்படுத்துவதன் மூலம் அல்லது வன்கொடுமையின் மூலம், அல்லது வார்த்தைகளை அல்லது செயல்களை பயன்படுத்துவதன் மூலம் பாலியல் தொந்தரவு அல்லது துன்புறுத்தலை ஏற்படுத்துகின்ற எவரும், பாலியல் துன்புறுத்தல் குற்றத்தை செய்தவராகின்றார்..."
இந்த பிரிவு பாலின நடுநிலை சொற்களை பயன்படுத்துகின்றது. எந்தவொரு நபரின் பாலின அடையாளத்தையும் பொருட்படுத்தாமல் பாலியல் துன்புறுத்தலுக்காக இந்த பிரிவின் கீழ் எந்தவொரு நபரும் குற்றம் சாட்டப்பட முடியும். இந்த பகுதி இரண்டு விளக்கங்களை வழங்குகின்றது:

**விளக்கம்:**

- அதிகாரத்தில் உள்ள ஒரு நபரால், வேலை செய்கின்ற ஒரு இடத்தில் அல்லது வேறு ஏதாவது இடத்தில் பயன்படுத்தப்படுகின்ற வார்த்தைகள் அல்லது செயல்களால் ஏற்படுகின்ற விரும்பத்தகாத செயல்பாடுகள் பாலியல் துன்புறுத்தல் குற்றமாகவே கொள்ளப்படுகின்றது.
- இந்த பிரிவின் நோக்கங்களுக்காக 363 வது பிரிவின் கீழ் பாலியல் பலாத்காரம் செய்யாத அல்லது 363B பிரிவின் கீழ் பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் செய்யாத எந்தவொரு செயலையும் வன்கொடுமையானது உள்ளடக்கியிருக்கலாம்.

ஒரு செயலானது பாலியல் வன்புணர்வோ அல்லது பாரிய பாலியல் துஷ்பிரயோகமோ இல்லையென்றால், அத்தகைய செயல்கள் இந்த பிரிவின் கீழ் வருகின்றன. இந்த பிரிவின் கீழ் எந்த செயல்கள் உள்ளடக்கப்படலாம்? என்று நீங்களே பங்கேற்பாளர்களிடம் கேட்கலாம்

விரும்பத்தகாத பாலியல் கருத்து அல்லது சைகை, ஒப்புதல் இல்லாமல் ஒரு பாலியல் படத்தை காட்டுதல், ஒருவரின் நீள்காட்சட்டையை கீழே இழுத்தல் அல்லது அவர்களுடைய ஆடைகளை களைதல், யாராவது ஆடைகளை

களைகின்ற பொழுது அல்லது ஒப்புதல் இல்லாமல் புணர்வு கொள்கின்ற பொழுது பார்த்தல் போன்ற பாலியல் தொடர்பு இல்லாத செயல்கள் பிரிவு 345 இன் கீழ் தண்டனை விதிக்கப்படலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இரண்டாவது விளக்கத்தின் அடிப்படையில், ஒப்புதல் இல்லாமல் உடலின் பகுதியை அல்லது பிறப்புறுப்புக்களை தொடுதல் அல்லது வற்புறுத்தி முத்தமிடுதல் போன்ற எந்தவொரு வடிவிலான பாலியல் வன்முறையும் இந்த பிரிவின் கீழ் வருகின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

இந்த பிரிவை பிரிவு 365B உடன் ஒப்பிடுவது பயனுள்ளதாக இருக்கின்றது.

| பிரிவு 365B: ' பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்' | பிரிவு 345: 'பாலியல் துன்புறுத்தல்' |
|---|---|
| "பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் திருப்திக்காக ஒரு நபர், தன் பால் உறுப்புக்களை கொண்டோ அல்லது உடல் உறுப்புக்கள் ஏதேனும் கொண்டோ அல்லது ஏதேனும் உபகரணங்கள் கொண்டோ மற்றுமொரு நபரின் உடலில் உள்ள துளை மூலம், பிரிவு 363ன் படி பாலியல் வன்புணர்வல்லாத செயலை ஏதேனும் சந்தர்ப்பத்தில், பின்வரும் விளக்கத்திற்கமைய புரிந்தால்... " | "குற்றப்பலத்தை பயன்படுத்துவதன் மூலம் அல்லது வன்கொடுமையின் மூலம், அல்லது வார்த்தைகளை அல்லது செயல்களை பயன்படுத்துவதன் மூலம் பாலியல் தொந்தரவு அல்லது துன்புறுத்தலை ஏற்படுத்துகின்ற எவரும், பாலியல் துன்புறுத்தல் குற்றத்தை செய்தவராகின்றார்..." |

**வேலைத்தள பாலியல் துன்புறுத்தலானது இலங்கையில் குற்றமாக இருக்கின்றதா?**
வேலைத்தள பாலியல் துன்புறுத்தல் பிரிவு 345 இன் விளக்கத்தில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஒப்புதலின்றி நெருக்கமான புகைப்படங்களை பகிர்ந்துகொள்வது குற்றமாக இருக்கின்றதா?**
ஒப்புதலின்றி வயது வந்த ஒருவரின் நெருக்கமான புகைப்படங்களை பகிர்ந்துகொள்வது பிரிவு 345 இன் கீழ் குற்றமாகும். பொருத்தமான இடங்களில் பயன்படுத்தப்படக்கூடிய 'ஆபாச வெளியீடுகள்' தொடர்பான சட்டங்கள் இருக்கின்றன.

18 வயதிற்குட்பட்ட ஒருவரின் நெருக்கமான புகைப்படங்களை பகிர்ந்து கொள்வது, ஆபாச வெளியீடு அத்தோடு 2-10 ஆண்டுகள் தண்டனையை பெறுகின்ற, பிள்ளைகள் தொடர்பான ஆபாச வெளியீடு, மற்றும் கண்காட்சி என்ற தலைப்பில் பிரிவு 286A இன் கீழ் குற்றமாகும்.

**ஒரு பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்கின்ற இன்னொரு பெண்ணை இலங்கையின் சட்டப்படி தண்டிக்க முடியுமா?**
ஒரு பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்கின்ற இன்னொரு பெண்ணின் மீது பாலியல் வன்முறையின் அளவைப்பொறுத்து பிரிவு 345 அல்லது பிரிவு 365B கீழ் குற்றம் சுமத்தப்படலாம்.

## அமர்வு 03: செயற்பாடு: பாலுறவு மற்றும் பாலியல் வன்முறை பற்றிய சட்டங்கள்

*குழுக்களில் பங்கேற்பாளர்கள் கொடுக்கப்பட்ட சூழ்நிலைகளில் பொருந்துகின்ற சட்டத்தை அடையாளம் காண்பதற்கு முயற்சிப்பார்கள் . பொருந்துகின்ற சட்டத்தை 12 சூழ்நிலைகளுடன்- (6 சூழ்நிலைகள் இரண்டு தொகுப்புகளாக பிரிக்கப்பட்டுள்ளன) பொருத்துவதற்கு இரண்டு குழுக்கள் முயற்சி செய்வார்கள். இந்த குற்றத்திற்காக அவர்கள் கொடுக்க விரும்புகின்ற தண்டனையையும் குழுக்கள் அடையாளம் காண்பார்கள். முதல் ஆறு சூழ்நிலைகளை வழங்குவதற்கு முதல் குழுவும், அடுத்த ஆறு சூழ்நிலைகளை வழங்குவதற்கு இரண்டாவது குழுவும் அழைக்கப்படுகின்றன. பங்கேற்பாளர்கள் பலகையை சுற்றி கூடி, உதவியாளருடம் ஒரு கலந்துரையாலை மேற்கொள்வார்கள். தற்போதுள்ள சட்டத்தின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட தண்டனையை பயிற்சி வழங்குநர் விளக்குவார்.*

### நேரம்

1 மணித்தியாலம்

### இலக்கு குழு

ஒரு அமர்வில் சுமார் 30 பங்கேற்பாளர்கள்

### குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களினால்:

- விஷேட சூழ்நிலைகளுக்கு பொருந்துகின்ற விஷேட சட்டங்களை அடையாளம்காண முடியும்.

### தேவையான கருவிகள்

- அச்சிடப்பட்ட அட்டைகள், மாற்றக்கூடிய பிசின் தெளிப்பு, அத்தோடு பலகை.
- அச்சிடப்படவேண்டிய அட்டைகளை இணைப்புகளில் காணலாம்.
- இல்லையென்றால், கையால் எழுதப்பட்ட குறிப்புக்களுடன் 2X (பெரிய அளவு) ஒட்டும் குறிப்புக்களும் பயன்படுத்தப்பட முடியும்.

### தயாரிப்பு

- அச்சிடப்பட்ட அட்டைகள்

### படிமுறைகள்

- பங்கேற்பாளர்களை ஒவ்வொரு குழுவிலும் 5-8 பங்கேற்பாளர்களை கொண்ட 4 குழுக்களாக பிரிக்கவும்.
- இந்த செயற்பாட்டில், கொடுக்கப்பட்ட சூழ்நிலைக்கேற்ப எந்த சட்டம் பொருந்தும் என்பதை அடையாளம் காண்பதற்கு முயற்சிப்போம் என்பதை விளக்கவும்.
- நான்கு குழுக்களுக்கு இடையில் நான்கு செட் கார்டுகளை விநியோகித்து

அட்டவணையில் அட்டைகளை பொருத்த சொல்லவும். ஒழுங்கு உறுதியானவுடன், ஒட்டும் குறிப்புக்கள் அல்லது அட்டைகளை (இடமாற்றம் செய்யக்கூடிய பிசின் ஸ்ப்ரேயை பயன்படுத்தி) கீழே காட்டப்பட்டுள்ள வரிசையில் ஒரு பலகையில் அல்லது ஒரு பிளிப்சார்ட் இல் ஒட்டவும். இந்த குழு பயிற்சிக்கு பங்கேற்பாளர்களுக்கு 20 நிமிடங்களை கொடுக்கவும். அவர்கள் கேட்கக்கூடிய கேள்விகளுக்கு பதிலளிப்பதன் மூலம் குழுக்களுக்கு உதவவும்.

- செயற்பாடு முடிந்தவுடன் ஒவ்வொரு அணியையும் முன்வைக்கச்சொல்லவும்.
- மற்ற குழுவிலிருக்கின்ற பங்கேற்பாளர்களுக்கு கேள்விகளை கேட்பதற்கு அல்லது கருத்து தெரிவிப்பதற்கு அனுமதிக்கவும்.
- கலந்துரையாடலின் இறுதிமுடிவில், கீழே காட்டப்பட்டுள்ள வரிசையில் இருக்கின்ற சட்டத்தின் கீழ் தண்டனையை குறிக்கின்ற அட்டைகளை ஒட்டவும். அத்தோடு ஏற்கனவே இருக்கின்ற சட்டத்திற்கும், பங்கேற்பாளர்கள் விரும்பிய சட்டத்திற்கும் இடையிலுள்ள பெரிய வேறுபாடுகள் என்ன என்பதை நினைவில் கொள்ளவும்.
- வழிநடத்துனருக்கான குறிப்பு: பங்கேற்பாளர்கள் ஒருமித்த புணர்வுக்கு எந்த தண்டனையாவது தருவதாக கூறும் நிகழ்வுகளில் எச்சரிக்கையாக இருங்கள். மதிப்பை தெளிவுபடுத்தல் மற்றும் அணுகுமுறையை குறிப்பிடுதல் ஆகியவை இங்கே தேவைப்படக்கூடும்.

| **சூழ்நிலை** | **பொருந்துகின்ற சட்டத்தின் பிரிவு** | **பங்கேற்பாளர்கள் கொடுக்க விரும்புகின்ற தண்டனை** | **ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் கீழ் தண்டனை** |
|---|---|---|---|

## அட்டை செட் ஒன்று

| சூழ்நிலை | சட்டம் | பதிலளித்தவர்களால் தீர்மானிக்கப்பட்ட தண்டனை | ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் கீழ் தண்டனை |
|---|---|---|---|
| அமலியும் சரணியும் காதலர்கள். அவர்கள் இருவருமே 19 வயதான பெண்கள். ஒரு பார்ட்டியில், இருவரும் உணர்ச்சிவசப்பட்டு முத்தம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற பொழுது, காவல்துறை அதிகாரிகள் வந்து, அவர்களை கைது செய்கின்றார்கள் அத்தோடு அவர்களின் மீது வழக்கு தொடர்வதாக மிரட்டுகின்றார்கள். | பிரிவு 365A: தனிநபர்களுக்கு இடையிலான அநாகரீக செயல்களுக்கான சட்டங்கள் "எந்தவொரு நபரும், பொது இடத்தில் அல்லது தனி இடத்தில், இன்னொரு நபருடன் எந்தவொரு பாரதூரமான இழிசெயலையும் புரிந்தால் அல்லது அச்செயலின் பங்காளராக இருந்தால் அல்லது அச்செயலை தூண்டினால், அல்லது தூண்டுவதற்கு முயற்சி செய்தால் குற்றம் செய்தவராக கருதப்படுவார்." | (வெற்று அட்டை) | 0-2 வருட சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும்.<br><br>ஒருவர் 16 வயதிற்குட்பட்டவராக இருந்தால், 10-20 வருடங்கள் அபராதம் மற்றும் இழப்பீடு. |
| ஸ்டீபனும் அமலும் காதலர்கள். அவர்கள் இருவருமே 20 வயதான ஆண்கள். டேட் செய்து விட்டு வீட்டுக்கு செல்கின்ற வழியில், அவர்கள் பேசுவதற்காக யாருமில்லாத வீதியொன்றில் காரை நிறுத்துகின்றார்கள். ஒருவர் மற்றவரை வழிநடத்தி அவர்கள் காரிலேயே புணர்வு வைத்துக் கொள்கின்றார்கள். இரண்டு காவல்துறை அதிகாரிகள் | பிரிவு 365: 'இயற்கையின் நியதிக்கு மாறான குற்றம்' "எந்த ஆணோ, பெண்ணோ அல்லது விலங்கோ இயற்கையின் நியதிக்கு மாறாக தானாக முன்வந்து புணர்வில் ஈடுபடுகின்றாரோ, அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்படும்..." | (வெற்று அட்டை) | 0-10 வருடங்கள் அபராதத்துடன் சிறை<br><br>ஒரு நபர் 16 வயதிற்குட்பட்டிருந்தால், 10-20 வருடங்கள் அபராதம் மற்றும் இழப்பீட்டுடன் சிறை |

| | | | |
|---|---|---|---|
| அந்தப்பக்கமாக வந்து இரண்டு பேரையுமே கைது செய்கின்றார்கள். | | | |
| திமால் 25 வயதான ஒரு ஆண். 19 வயதான ஜக் உடன் அவர் உறவில் இருக்கின்றார். திமாலும் ஜக்கும் தங்களுடைய நிர்வாண புகைப்படங்கள், வீடியோக்களை பரிமாறியிருக்கின்றார்கள். திமால் ஜக்கை பிரிந்துவிடுகின்றார். ஜக் மிகுந்த கவலையும் கோபமும் அடைகின்றார். இதனால் ஜக் ஒரு வலைப்பக்கத்தில் திமாலுடைய நிர்வாண புகைப்படங்கள், வீடியோக்களை பதிவேற்றி, இணைப்பை திமாலுடைய முகநூல் பக்கத்திற்கு பகிர்கின்றார். | பிரிவு 345: 'பாலியல் துன்புறுத்தல்' "குற்றப்பலத்தை பயன்படுத்துவதன் மூலம் அல்லது வன்கொடுமையின் மூலம், அல்லது வார்த்தைகளை அல்லது செயல்களை பயன்படுத்துவதன் மூலம் பாலியல் தொந்தரவு அல்லது துன்புறுத்தலை ஏற்படுத்துகின்ற எவரும், பாலியல் துன்புறுத்தல் குற்றத்தை செய்தவராகின்றார்.." | (வெற்று அட்டை) | 0-5 வருட சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும். தப்பிப்பிழைத் தவருக்கு நீதிமன்றம் இழப்பீட்டை வழங்கும். |

## அட்டை செட் இரண்டு

| சூழ்நிலை | சட்டம் | பதிலளித்தவர்களால் தீர்மானிக்கப் பட்ட தண்டனை | ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் கீழ் தண்டனை |
|---|---|---|---|
| சூ ஒரு தன்பாலீர்ப்பு பெண்ணாக இருக்கின்றார். அவள் 19 வயதானவள் அத்தோடு ஒரு காதலியும் இருக்கின்றார். அவளுடைய தம்பி இதுகுறித்து மிகவும் கோபமாக இருக்கின்றான். அவன் சூ க்கு "ஒரு பாடத்தை கற்பித்து கொடுக்குமாறு" ஒரு உள்ளூர் ரௌடியான அவனுடைய சிறந்த நண்பன் ஹரினை கேட்கின்றான். ஹரின் ஒரு தும்புத்தடியை பயன்படுத்தி அவளை பாலியல் வன்புணர்வு செய்கின்றான். | பிரிவு 365B: 'பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்' பாலியல் திருப்திக்காக ஒரு நபர், தன் பால் உறுப்புக்களை கொண்டோ அல்லது உடல் உறுப்புக்கள் ஏதேனும் கொண்டோஅல்லது ஏதேனும் உபகரணங்கள் கொண்டு மற்றுமொரு நபரின் உடலில் உள்ள துளை மூலம் புரிந்தால்...."<br><br>நபரின் ஒப்புதல் இல்லாமல் | (வெற்று அட்டை) | 7-20 வருடங்கள் அபராதம் மற்றும் இழப்பீட்டுடன் சிறை. |
| ஷெஹான் 15 வயதான ஒரு ஆண். அவன் ஒரு 22 வயதான அவனுடைய அண்ணாவின் சிறந்த நண்பன் மாலிக்கை காதலிக்கின்றான். அவர்கள் படிப்படியாக நண்பர்களாகின்றார்கள் அத்தோடு ஒருநாள் வீட்டில் யாரும் இல்லாத வேளையில் ஷெஹான் மாலிக்கை வீட்டிற்கு அழைக்கின்றான். அவர்கள் புணர்வு வைத்துக் கொள்கின்றார்கள். திடீரென ஷெஹானுடைய பெற்றோர் வீட்டிற்கு வந்து, மிகுந்த கோபமடைகின்றார்கள். அவர்கள் காவல்துறையில் புகார் | பிரிவு 365B: 'பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்' பாலியல் திருப்திக்காக ஒரு நபர், தன் பால் உறுப்புக்களை கொண்டோ அல்லது உடல் உறுப்புக்கள் ஏதேனும் கொண்டோஅல்லது ஏதேனும் உபகரணங்கள் கொண்டு மற்றுமொரு நபரின் உடலில் உள்ள துளை மூலம் புரிந்தால்...."<br><br>மற்ற நபர் 16 வயதிற்குட்பட்டவராக இருக்கும் பொழுது மற்றவரின் ஒப்புதலுடன் அல்லது இல்லாமல் | (வெற்று அட்டை) | 10-20 வருடங்கள் அபராதம் மற்றும் இழப்பீட்டுடன் சிறை |

| | | | |
|---|---|---|---|
| அளிக்கின்றார்கள். காவல்துறை மாலிக்கை கைதுசெய்கின்றது. | | | |
| ஷானி ஒரு மாற்றுப்பாலின பாலியல் தொழிலாளி. ஒருநாள் ஷானி கடைக்கு போய்க்கொண்டிருந்த பொழுது, இரண்டு காவல்துறை அதிகாரிகள் அவளை கைதுசெய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்கின்றார்கள். காவல்துறைக்கு அவள் ஒரு பாலியல் தொழிலாளி என்று நன்றாகவே தெரியும், ஏனென்றால் இதற்கு முன்பு இரண்டு-மூன்று தடவைகள் அவள் கைது செய்யப்பட்டிருக்கின்றாள். அவளை அவர்கள் செல்லில் போட்டுவிட்டு, சிவில் உடையில் இருக்கின்ற இரண்டு காவல்துறை அதிகாரிகளுடன் அவள் வாய்வழியான புணர்வை வைத்துக்கொண்டால் மட்டுமே அவளை போகவிடுவதாக சொல்கின்றார்கள். அவளும் ஏற்றுக்கொள்கின்றாள். அதன்பின்பு காவல்துறை அதிகாரிகள் அவளுக்கு 5000 ரூபாயை கொடுத்து, அவளை போக விடுகின்றார்கள். | பிரிவு 365B: 'பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம்', பாலியல் திருப்திக்காக ஒரு நபர், தன் பால் உறுப்புக்களை கொண்டோ அல்லது உடல் உறுப்புக்கள் ஏதேனும் கொண்டோஅல்லது ஏதேனும் உபகரணங்கள் கொண்டு மற்றுமொரு நபரின் உடலில் உள்ள துளை மூலம், பிரிவு 363ன் படி பாலியல் வன்புனர்வல்லாத செயலை ஏதேனும் சந்தர்ப்பத்தில், பின்வரும் விளக்கத்திற்கமைய புரிந்தால்.<br><br>அத்தகைய நபர் சட்டபூர்வமான அல்லது சட்டவிரோதமான தடுப்புக்காவலில் இருக்கும்பொழுது மற்ற நபரின் ஒப்புதலுடன் | (வெற்று அட்டை) | 7-20 வருடங்கள் அபராதம் மற்றும் இழப்பீட்டுடன் சிறை.<br><br>குறிப்பு: இது சித்திரவதையில் இருந்து சுதந்திரத்திற்கான ஒரு அடிப்படை உரிமை மீறலாகும். |

## அட்டை செட் மூன்று

| சூழ்நிலை | சட்டம் | பதிலளித்தவர்களால் தீர்மானிக்கப்பட்ட தண்டனை | ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் கீழ் தண்டனை |
|---|---|---|---|
| ஒரு மாற்றுப்பாலின பெண் காவல்துறையால் கைது செய்யப்படுகின்றாள். பிறப்பிலே 'ஆண்' ஆக பால் படுத்தப்பட்டதை விளக்குகின்ற அடையாள அட்டையை கொண்டிருந்து, பெண்ணாக தோற்றமளிக்கின்றதால் காவல்துறை அவளின் மீது வழக்கு தொடர முயற்சிக்கின்றார்கள். | பிரிவு 399: 'வேறுநபரை போல் ஆள்மாறாட்டம்' "ஒரு நபர் "வேறுநபரை போல் ஆள்மாறாட்டம்" செய்து ஏமாற்ற முற்பட்டால், அவர் வேறுநபர் போல் பாவனை செய்து, ஒருவரை வேறு ஒருவர் போல வேண்டுமென்றே காண்பிக்க முற்பட்டால் அல்லது அவர் அல்லாத மற்றுமொரு நபரை பிரதிநிதித்துவம் செய்ய முற்படுத்தல். இந்த குற்றம் இழைக்கப்பட்ட, ஆள்மாறாட்டம் செய்து பிரதிநிதித்துவம் செய்யப்படும் நபர் உண்மையானவராகவோ அல்லது கற்பனையான ஒரு நபராகவோ இருக்கக்கூடும்." | (வெற்று அட்டை) | 0-1 வருட சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும். |
| ஒரு ஆண் நவீன/ ப்ராண்ட் ஆடைகளை திருடுவதற்காக ஒரு ஆடை கடைக்கு செல்கின்றார். ஆனால் பாதுகாப்பு கமராக்களில் | பிரிவு 399: 'வேறுநபரை போல் ஆள்மாறாட்டம்' "ஒரு நபர் "வேறுநபரை போல் ஆள்மாறாட்டம்" செய்து ஏமாற்ற முற்பட்டால், அவர் வேறுநபர் போல் பாவனை செய்து, | (வெற்று அட்டை) | 0-1 வருட சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும். |

| | | | |
|---|---|---|---|
| மாட்டாமல் இருப்பதற்காக, அவர் ஒரு புர்காவையும் ஒரு கைப்பையையும் அணிந்துகொள்கின்றார் அத்தோடு ஒரு பெண்ணாக தன்னை காட்டிக்கொள்கின்றார். | ஒருவரை வேறு ஒருவர் போல வேண்டுமென்றே காண்பிக்க முற்பட்டால் அல்லது அவர் அல்லாத மற்றுமொரு நபரை பிரதிநிதித்துவம் செய்ய முற்படுத்தல். இந்த குற்றம் இழைக்கப்பட்ட, ஆள்மாறாட்டம் செய்து பிரதிநிதித்துவம் செய்யப்படும் நபர் உண்மையானவராகவோ அல்லது கற்பனையான ஒரு நபராகவோ இருக்கக்கூடும்." | | |
| மாலனும் ரிச்சட்டும் தன்பாலீர்ப்புள்ளவர்கள். அவர்கள் 3 வருடங்களாக ஒன்றாக வாழ்ந்துவருகின்றனர். மாலன் ஒரு தொழில்ரீதியான மாடலாக இருக்கின்றான். ரிச்சட் மாலனை மிகவும் சந்தேகிக்கின்றான் அத்தோடு அவனை தொடர்ந்து திட்டுகின்றான். ஒருநாள் மாலன் ஒரு விருந்துக்கு (Party) பின்பு வீடு வந்த பொழுது, ரிச்சட் மிகவும் கோபமடைந்து அவனை அடித்தான். | 2005 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க குடும்ப வன்முறை தடுப்புச்சட்டம் (PTVA) 'குடும்ப வன்முறை செயற்பாடொன்று எந்தவொரு நபரை (பாதிக்கப்பட்ட நபர்) இலக்காக வைத்து நடத்தப்படுகிறதோ அல்லது நடத்தப்படக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றதோ, அவர் நீதவான் நீதிமன்றத்தில், அவ்வாறான குடும்ப வன்முறையை தடுக்க நீதிமன்ற பாதுகாப்பு ஆணைக்கான விண்ணப்பத்தை முன்வைக்கலாம்.' | (வெற்று அட்டை) | PDVA இன் கீழ் தண்டனை கிடையாது, ஒரு பாதுகாப்பு உத்தரவு மட்டுமே வழங்க முடியும்.<br><br>தண்டனைச்சட்டத்தின் பிரிவு 310 இன் கீழ் 'புண்படுத்துதல்' தண்டிக்கப்படலாம். 0-1 வருட சிறை அல்லது அபராதம். |

## நான்கு அட்டை செட்

| சூழ்நிலை | சட்டம் | பதிலளித்தவர்களால் தீர்மானிக்கப்பட்ட தண்டனை | ஏற்கனவே இருக்கின்ற சட்டத்தின் கீழ் தண்டனை |
|---|---|---|---|
| நளின் 24 வயதான ஒரு தன் பாலீர்ப்புள்ளவர். ஒருநாள் அவன் பேருந்தில் வேலைக்கு செல்கின்ற பொழுது, அவனுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு வயதான நபர் அவருடைய ஆணுறுப்பை வெளியே எடுத்து, நளினுக்கு பார்க்குமாறு சைகை காட்டிவிட்டு, சுயஇன்பம் காணத் தொடங்குகின்றார். | பிரிவு 345: 'பாலியல் துன்புறுத்தல்' "குற்றப்பலத்தை பயன்படுத்துவதன் மூலம் அல்லது வன்கொடுமையின் மூலம், அல்லது வார்த்தைகளை அல்லது செயல்களை பயன்படுத்துவதன் மூலம் பாலியல் தொந்தரவு அல்லது துன்புறுத்தலை ஏற்படுத்துகின்ற எவரும், பாலியல் துன்புறுத்தல் குற்றத்தை செய்தவராகின்றார்..." | (வெற்று அட்டை) | 0-5 வருட சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும். தப்பிப் பிழைத்தவருக்கு நீதிமன்றம் இழப்பீட்டை வழங்கும். |
| மிச்சேல் 24 வயதான ஒரு தன்பாலீர்ப்பு பெண்ணாக இருக்கின்றாள். ஒரு வீட்டு விருந்து (Party) ஒன்றில் கமல் என்கின்ற 35 வயதான ஆண் அவளை பின்தொடர்ந்து, அவளுடன் நடனம் ஆடுவதற்கு கேட்கின்றார். பின்னர் மிச்சேல் மிகவும் போதையாகி, கிட்டத்தட்ட அவள் மயங்கிவிடுகின்றாள். அவளால் தெளிவாக சிந்திக்க முடியவில்லை. கமல் அவளை படுக்கையறைக்கு அழைத்து செல்கின்றான். அவர்கள் புணர்வு வைத்துக்கொள்கின்றார்கள். காலையில், மிச்சேல் என்ன | பிரிவு 365B: 'பாரிய பாலியல் துஷ்பிரயோகம்' "பாரிய பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் திருப்திக்காக ஒரு நபர், தன் பால் உறுப்புக்களை கொண்டோ அல்லது உடல் உறுப்புக்கள் ஏதேனும் கொண்டோஅல்லது ஏதேனும் உபகரணங்கள் கொண்டு மற்றுமொரு நபரின் உடலில் உள்ள துளை மூலம் புரிந்தால்..."<br><br>அத்தகைய நபர் மது அல்லது போதைப்பொருட்களால் தூண்டப்பட்ட போதைநிலையில் இருந்த மற்ற நபரின் ஒப்புதலுடன் | (வெற்று அட்டை) | அபராதம் மற்றும் இழப்பீட்டுடன் 7-20 சிறை வருடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| நடந்தது என்பதை உணர்ந்து மிகவும் கஷ்டப்படுகின்றார், ஏனென்றால் அவள் கமலுடன் புணர்வு வைத்துக் கொள்வதற்கு விரும்பவில்லை. | | | |
| லீனா 35 வயதான ஒரு பெண். மைக் அவளுடைய 45 வயதான அயலவர். அவர்கள் நண்பர்களாக இருக்கின்றனர். ஒருநாள் மைக் கொஞ்சம் குடித்ததால் கீழே விழுகின்றான். லீனா அவனுக்கு ஒரு கப் தேநீர் போட்டுக் கொடுக்கின்றாள். அவர்கள் சிறிதுநேரம் பேசுகின்றார்கள் மற்றும் மைக் அவன் மிகவும் தனிமையாக இருப்பதாக கூறி, அவளுடன் புணர்வு வைத்துக் கொள்வதற்கு முயல்கின்றான். லீனா இல்லை என்று கூறி மைக்கை தள்ளிவிட முனைகின்றாள் ஆனால் அவன் அவனுடைய ஆணுறுப்பை அவளுடைய யோனியினுள் செலுத்தி அவளை பாலியல் வன்புணர்வு செய்கின்றான்.. | பிரிவு 363: 'பாலியல் வன்புணர்வு' "பின்வரும் ஏதாவது விளக்கங்களின் கீழுள்ள சூழ்நிலைகளில் ஒரு பெண்ணுடன் புணர்வு வைத்துக்கொண்ட ஆண் "பாலியல் வன்புணர்வு" செய்வதாக கூறப்படுகின்றது..."<br><br>ஒரு பெண்ணுடைய ஒப்புதல் இல்லாமல் | (வெற்று அட்டை) | அபராதம் மற்றும் இழப்பீட்டுடன் 7-20 சிறை வருடங்கள் |

## குறிப்புக்கள்

- ஒரே பாலின இணைகளுக்கிடையிலான புணர்வு ஒரு குற்றமாக இருக்கக்கூடாது மற்றும் தண்டிக்கப்படக்கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
- புணர்வா அல்லது பாலியல் வன்முறையா என்பதை தீர்மானிக்கின்ற காரணியாக ஒப்புதல்/ சம்மதம்தான் இருக்கின்றது என்பதை முன்னிலைப்படுத்துங்கள்.
- மாறுபட்ட பாலீர்ப்பு மற்றும் பாலின அடையாளங்களை கொண்டவர்களுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்கு கொண்டுவருவதற்காக தற்போதுள்ள சட்டத்தில் சீர்திருத்தங்கள் தேவையாக இருக்கின்றன என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## அமர்வு 04: எல்ஜிபிடி+ மக்களை துன்புறுத்துகின்ற அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டமும் வேறு சட்டங்களும்

*இந்த அமர்வு ஒரு வட்டவடிவிலான கலந்துரையாடலாக இருக்கின்றது. அறையின் நடுவில் 'ஆம்' மற்றும் 'இல்லை' என்று குறிக்கின்ற ஒரு கோடு இருக்கின்றது. பங்கேற்பாளர்கள் பயிற்சிவழங்குநரின் கேள்விகளுக்கான பதில்களின் அடிப்படையில் 'ஆம்' அல்லது 'இல்லை' க்கு நகர்வார்கள் . ஒரு சிறிய கலந்துரையாடல் பின்வருமாறு.*

### நேரம்

30 நிமிடங்கள்

இலக்கு குழு

ஒரு அமர்வில் சுமார் 30 பங்கேற்பாளர்கள்

### குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களினால்:

- அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டத்தின் கீழ் குற்றங்களை கூற முடியும்.
- எல்ஜிபிடி+ மக்களை துன்புறுத்துவதற்கும், அச்சுறுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் சட்டங்களை புரிந்துகொள்ள முடியும்.

### தேவையான கருவிகள்

- பெயின்டர் டேப்
  தயாரிப்பு
- அறையின்/ வட்டத்தின் நடுக்கோட்டை பெயின்டர் டேப் மூலம் குறியுங்கள்
- கோட்டின் இருபுறமும் 'ஆம்' மற்றும் 'இல்லை' என்று குறியுங்கள்
- கலந்துரையாடலின் முடிவில் கொடுக்கப்படுகின்ற கையேடுகள்

### படிமுறைகள்

- இந்த செயற்பாடு எல்ஜிபிடி+ மக்களை தொந்தரவு செய்கின்ற சில சட்டங்களை பற்றி அறிவதற்கான ஒரு முயற்சியாக இருக்கின்றது என்பதை விளக்கவும்.
- நீங்கள் சில செயற்பாடுகளை படிக்க போகின்றீர்கள் என்பதை விளக்கவும் மற்றும் பங்கேற்பாளர்கள் அத்தகைய செயற்பாடு தண்டிக்கப்பட வேண்டுமா இல்லையா என்று நினைப்பதை பொறுத்து 'ஆம்' அல்லது 'இல்லை' பக்கத்திற்கு நகரும்படி கேட்கவும். இந்த செயற்பாடு ஏன் தண்டிக்கப்பட வேண்டும் அல்லது இல்லை என்று அவர்கள் நினைக்கின்றார்கள் என்று 1-2 பதிலளிப்பவர்களிடம் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்கவும்..
- இந்த கூற்றுக்களை படியுங்கள்:
  1. பொது இடங்களில் பிச்சையெடுத்தல்
  2. ஒரு ஒரே பாலின இணையர்/ ஜோடி பொதுவில் முத்தமிடுதல்
  3. பாலியல் தொழிலிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் வாழ்தல்
  4. ஒரு குடும்ப உறுப்பினரை பொது இடத்தில் பிச்சை எடுக்க வைத்தல்
  5. ஒரு பொதுச்சுவரில் அநாகரிகமான ஒன்றை வரைதல்
  6. பொதுவில் ஒருவரை பின்தொடர்தல்
  7. உடலின் தனிப்பட்ட அங்கங்களை பொதுவில் வெளிப்படுத்துதல்
  8. பொதுவில் ஒரு சட்டை இல்லாமல் நடந்து செல்லுகின்ற ஒரு பெண்
  9. சிதைந்த கையை பொதுவில் காட்டி பிச்சை எடுத்தல்

10. ஒரு காவல்துறை அதிகாரியால் கைது செய்யப்படுவதை எதிர்த்தல்
11. ஒரு பாலியல் தொழிலாளி பொதுவில் ஒரு வாடிக்கையாளரை தேடுதல்
12. ஒரு தன்பாலீர்ப்பாளர் பொதுவில் புணர்வு கொள்வதற்காக யாரையாவது ஒருவரை தேடுதல்

- இந்த செயற்பாடுகள் அனைத்தும் அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டம் கீழ் வருவதால் அங்கீகரிக்கப்படுகின்றன என்பதை விளக்கவும்.
- மேலும், அலைந்துதிரிவோர் கட்டளைசட்டம் காலனித்துவ மதிப்புகளை வெளிப்படுத்துகின்றது என்பதை விளக்கவும். இந்த ஒழுங்குமுறை மக்களை 'ஒழுங்கற்ற நபர்கள்', 'முரடர்கள்', 'அலைபவர்கள்' மற்றும் 'சரிசெய்ய முடியாத முரடர்கள்' என்று முத்திரை குத்துகின்றது, அந்த நபரை குற்றவாளியாக்குகின்றது மற்றும் செயற்பாட்டை அல்ல.
- 1907 ஆம் ஆண்டின் 05 ஆம் இல தடுப்பு இல்ல கட்டளைச்சட்டம் மற்றும் தண்டனைச் சட்டக்கோவை பிரிவு 451 ஆகியவை "புகழ்பெற்ற திருடர்களால் ஏமாற்றுவது" என்கின்ற தலைப்பில் எல்ஜிபிடி+ மக்களை துன்புறுத்துவதற்கு பயன்படுத்தபடுகின்றது என்பதை விளக்கவும்.
- கையேடுகளை விநியோகிக்கவும் அத்தோடு எல்ஜிபிடி+ மக்களை துன்புறுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்ற இந்த சட்டங்களை பற்றி அதிகமாக கற்றுக்கொள்ள, பங்கேற்பாளர்களுக்கு அதை படிக்க ஊக்குவிக்கவும்.

## கையேடு

இலங்கையில் எல்ஜிபிடி+ மக்களை கைதுசெய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற சட்டங்கள்

**<u>1841 ஆம் ஆண்டு 04 ஆம் இலக்க அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டம்</u>**

இது இலங்கையின் அலைந்து திரிதல், ஒழுங்கற்ற நடத்தை, 'பொது அநாகரிகம்' மற்றும் பாலியல் தொழிலுக்கு கோருதல் ஆகியவற்றை குற்றமாக்குகின்ற முக்கிய சட்டமாக இருக்கின்றது.

3 ஆம் கட்டளைப்பிரிவு குறிப்பிட்ட நபர்களை பயனற்ற மற்றும் ஒழுங்கற்ற நபர்களாக வகைப்படுத்துகின்றது:

(அ) "ஒவ்வொரு நபரும் தொழில் அல்லது வேறு வழிகளில் தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள முடியும், ஆனால் வேண்டுமென்றே மறுக்கின்றவர்கள் அல்லது புறக்கணிக்கின்றவர்கள், அத்தோடு வெளியில் சுற்றித் திரிகின்றவர்கள் அல்லது ஏதாவது பொது இடத்தில், தெரு, நெடுஞ்சாலை, நீதிமன்றங்களில் பிச்சை எடுப்பதற்காக இருப்பவர்கள் அல்லது பிச்சையை சேகரிப்பவர்கள், அல்லது அவரது குடும்பத்தில் யாரையாவது அப்படி செய்வதற்கு ஊக்குவிப்பவர்கள், மத வாக்குறுதிகளை நிறைவேற்றுவதால் மதகுருமார்கள் மற்றும் யாத்ரீகர்களை தவிர்த்து...

(ஆ) பொது தெரு அல்லது நெடுஞ்சாலையில், அல்லது பொது விடுதியின் ஏதாவது இடத்திலும் அலைந்து திரிந்து, அத்தோடு கலவரமாக அல்லது அநாகரீகமாக நடந்து கொள்கின்ற ஒவ்வொரு பொது விபச்சாரியும்

(இ) வெளியில் சுற்றித் திரிகின்ற அல்லது வராந்தா, அவுட்ஹவுஸ்/ வெளிவீடு , கொட்டகை, அல்லது ஆளில்லாத கட்டிடம், அல்லது ஏதாகிலும் வண்டி, வாகனம், அல்லது பிற வாடகை அறை போன்றவற்றில் தங்கியிருக்கின்ற, அதன் உரிமையாளரின் அனுமதியின்றி, மற்றும் வெளிப்படையாக காணப்படக்கூடிய வாழ்வாதார வழிமுறைகள் இல்லாமல், மற்றும் தன்னை பற்றிய ஒரு நல்ல கணிப்பினை தனக்குத்தானே கொடுக்காமல் இருக்கின்ற ஒவ்வொரு நபரும்

(ஈ) உரிமையாளரின் அனுமதி இல்லாமல், ஏதாகிலும் வீடு அல்லது கட்டிடம் அல்லது சுவரின் பக்கத்தின் ஏதாவது பிளக்கார்ட்டை அல்லது நோட்டீஸை சரிசெய்வதன் மூலம், அல்லது ஏதாவது அநாகரிகமான அல்லது அவமதிக்கின்ற எழுத்து அல்லது வரைதல் மூலம் சிதைக்கின்ற ஒவ்வொரு நபரும்

(உ) எந்தவொரு பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிக்குள் அமைந்திருக்கின்ற எந்தவொரு வார்ப்(f), ஜெடி, தெரு, சாலை, நடை பாதை, வராந்தா, அல்லது பிற இடத்திலிருக்கின்ற ஒவ்வொரு நபரும் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்துகின்ற அல்லது அணுகக்கூடிய ஏனைய இடங்களிலுள்ள, தொடர்ந்து மற்றும் சட்டபூர்வமான காரணம் இல்லாமல் தொடர்ந்து, ஒப்புக்கொண்டு அல்லது வார்த்தைகள் அல்லது சைகைகள் மூலம் எந்தவொரு நபரும் அவருடைய விருப்பத்திற்கு எதிராகவும் எரிச்சலூட்டும் விதத்திலும் கருத்து வெளியிடுதல் "

ஒரு உத்தரவும் இல்லாமல் "பயனற்றதாக மற்றும் ஒழுங்கற்றதாக" கருதப்படுகின்ற எந்தவொரு நபரையும் ஒரு காவல்துறை அதிகாரி கைது செய்யலாம்.

1841 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்க 7 வது பிரிவானது முக்கியமாக பொது இடங்களில் அநாகரிகமான செயல்களை கோருவதற்கான வழக்கு தொடர்வதற்கு திருநர்களுக்கு மற்றும் தன்பாலீர்ப்புள்ள ஆண்களுக்கு எதிராக பயன்படுத்தப்படுகின்றது.

பிரிவு 07 பின்வருமாறு கூறுகின்றது:

7. (1) பின்வரும் நபர்கள், அதாவது-

(அ) எந்தவொரு பொது இடத்திலோ அல்லது அதை பற்றியோ எந்தவொரு நபரும் சட்டவிரோதமான பாலியல் புணர்வின் அல்லது அநாகரீகமான செயலின் நோக்கத்திற்காக குறிப்பிட்ட நபருடனோ அல்லது எந்தவொரு வேறு நபருடனோ கோரினால், விஷேடமாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும்;

(ஆ) எந்தவொரு நபரும் எந்தவொரு பொது இடத்திலும் அல்லது அதைப்பற்றி மோசமான அநாகரீக செயலில் ஈடுபடுவதை கண்டால் அல்லது பாரிய அநாகரிகத்துடன் நடந்துகொள்வதை கண்டால்;

(இ) கண்டுபிடிக்கப்பட்ட எந்த நபரும் -

(i) எந்தவொரு உள்ளூர் சட்டங்கள் அல்லது விதிமுறைகளுக்கு முரணான எந்தவொரு பொது உறைவிடத்திலும் அத்தகைய உறைவிடங்களை பயன்படுத்துவதை பரிந்துரைத்தல்; அல்லது

(ii) அரசுக்கு சொந்தமான எந்தவொரு உறைவிடத்திலும், அதற்கு பொறுப்பான நபரின் அனுமதியின்றி; அல்லது

(iii) வளாகத்திலுள்ள எந்தவொரு கைதியின் அழைப்பை தவிர, எந்தவொரு குடியிருப்பு இல்லத்துடனும் இணைக்கப்பட்ட எந்தவொரு தனியார் உறைவிடத்திற்குள்,
அத்தகைய சூழ்நிலைகளின் கீழ் அவர் ஒழுக்கக்கேடான நோக்கங்களுக்காக ஆஜராகியிருப்பது ஊகிக்க நியாயமானது, நீதிமன்றத்தின் திருப்திக்காக அவர் இருப்பதை விளக்க முடியாவிட்டால், அவர் குற்றவாளியாக்கப்படுவார், மற்றும் ஆறு மாதங்களுக்கு மிகாத காலத்தில் சிறை, அல்லது நூறு ரூபாய்க்கு மிகாத ஒரு அபராதம் அல்லது இரண்டும் ஆகிய சுருக்கமான குற்றத்தீர்ப்பை பொறுப்பேற்பார்"

அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டத்தில் முன்னறிவிக்கப்பட்ட தண்டனையானது பாரிய மற்றும் செய்த குற்றங்களின் எண்ணிக்கையை பொறுத்தே மாறுபடுகின்றது.

இந்த கட்டளை ஒதுக்கப்பட்ட சமூகங்களை மட்டுமல்ல, எதிர்ப்பாலீர்ப்புடைய நபர்களையும் பாதிக்கின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டியது கட்டாயமானதாகும். குறிப்பாக பாசத்தை பொதுவில் வெளிப்படுத்திய/ வெளிப்படுத்துவதை தேர்வுசெய்த இளம் இணையர்கள். இந்த சட்டத்தின் கீழ் ஆணுறைகளை தங்களுடைய கைப்பையில் வைத்திருந்த பெண்களின் மீது குற்றம் சாட்டப்பட்ட சம்பவங்கள் பதிவாகியுள்ளன. பாலியல் தொழிலை பற்றி அடுத்தடுத்த பிரிவுகளில் இது பற்றி மேலும் கலந்துரையாடப்படும்.

அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டத்தில் மேலதிகமாக, 1907 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க தடுப்பு இல்லக்கட்டளைச்சட்டம் மற்றும் தண்டனைச்சட்டக்கோவை 451வது பிரிவு ஆகியவை "புகழ்பெற்ற திருடர்களால் சுற்றித்திரிதல் பற்றியது" என்கின்ற தலைப்பில் எல்ஜிபிடி+ மக்களை துன்புறுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

**<u>1907 ஆம் ஆண்டு 05 ஆம் இலக்க தடுப்பு இல்லக்கட்டளைச்சட்டம்</u>**

இந்த கட்டளைச்சட்டத்தின் 02 வது பிரிவானது ஒரு 'அலைந்து திரிபவரை' பின்வருமாறு விவரிக்கின்றது:

"(அ) யாராவது பிச்சை கேட்பது கண்டுபிடிக்கப்பட்டால்" அல்லது

"(ஆ) எந்தவொரு மத உறுதிமொழி அல்லது கடமையை நிறைவேற்றுவதற்காக தானம் சேகரிக்கின்ற மதகுருமார்கள் மற்றும் யாத்ரீகர்கள் தவிர்ந்த, உடல் ரீதியாக சம்பாதிக்க இயலாத, அல்லது வேலை செய்ய விருப்பமில்லாத, தனது சொந்த வாழ்வாதாரம் மற்றும் வெளிப்படையாக காணக்கூடிய வாழ்வாதார வழிமுறைகள் இல்லாத எந்தவொரு நபரும்".

இந்த கட்டளைச்சட்டத்தின் பிரிவு 10 கூறுகின்றது, ஒரு அலைந்து திரிபவராக தோன்றுகின்ற யாராவது மற்றும் "ஒரு காவல்துறை அதிகாரியுடன் வர மறுக்கின்ற அல்லது தவறவிடுகின்ற, அல்லது தேவைப்படுகின்ற பொழுது

மஜிஸ்ட்ரேட்/ நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாக ஆஜராக வேண்டிய, இந்த கட்டளையின் நோக்கங்களுக்காக, உத்தரவின்றி கைது செய்யப்படலாம். ஒரு மஜிஸ்ட்ரேட்/ நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாக குற்றம் நிரூபிக்கப்பட்டால், எந்த ஒரு விளக்கத்திற்கும் மூன்று மாதங்களுக்கு மிகாமல் சிறைத்தண்டனை விதிக்கப்படும்."

"குற்றவாளி அல்லது ஆஜர்படுத்தப்பட்டவர் அல்லது நீதிமன்றத்தின் முன்பாக ஆஜர்படுத்தப்பட்டவர் கட்டளைக்கு உட்பட்ட ஒரு அலைந்து திரிபவராக இருக்கின்றார்" என்று கருதினால், அந்த நபரை தடுப்புக்காவல் இல்லத்தில் தடுத்து வைக்க உத்தரவிடுவதற்கு, கட்டளைச்சட்டத்தின் 4 வது பிரிவு மஜிஸ்திரேட்டுக்கு/ நீதவானுக்கு வழங்குகின்றது, "அதை தண்டிக்கின்ற அதிகாரத்தை கொண்ட எந்த தண்டனைக்கும் கூடுதலாக அல்லது மாற்றாக".

**451 வது பிரிவு தண்டனைச்சட்டக்கோவை (1883 ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க கட்டளை): "புகழ்பெற்ற திருடனால் ஏமாற்றுதல்"**

இந்த பிரிவு, "எந்தவொரு பொது இடத்தில் அல்லது ஏதாகிலும் வார்பி(f)ல் அல்லது ஏதாவது கிடங்கில் அல்லது ஏதாவது கப்பலில் சுற்றித்திரிகின்ற அல்லது பதுங்கியிருக்கின்ற எந்தவொரு துறைமுகத்திலோ அல்லது வேறு ஏதாகிலும் நீர்வழியிலோ செய்கின்ற திருட்டு அல்லது வேறு எந்த சட்டவிரோதமான செயலையும் செய்கின்ற ஒரு புகழ்பெற்ற திருடனான, ஒரு நபருக்கு மூன்று மாதங்களுக்கு நீட்டிக்கப்படக்கூடிய காலத்திற்கு சிறைதண்டனை அல்லது ஐம்பது ரூபாய்க்கு மிகாமல் அபராதம் அல்லது இரண்டுமே விதிக்கப்படும்." என்று கூறுகின்றது.

## அமர்வு 05: பாலியல் தொழில் தொடர்பாக இலங்கையிலுள்ள சட்டங்கள்

***இது ஸ்லைடுகளின் உதவியுடன் ஒரு சுருக்கமான விரிவுரையாக இருக்கின்றது.***

**நேரம்**
30 நிமிடங்கள்

**இலக்கு குழு**
ஒரு அமர்வில் சுமார் 30 பங்கேற்பாளர்கள்

**குறிக்கோள்கள்**
இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களினால்:

- இலங்கையிலுள்ள பாலியல் தொழில் தொடர்பான சட்டத்தை கூற முடியும்.

**தயாரிப்பு**

- ஸ்லைடுகள்

**படிமுறைகள்**

- 'பாலியல் தொழில்' என்பதை பங்கேற்பாளர்கள் என்னவென்று விளங்கிக்கொள்கின்றார்கள் என்பதை கேட்பதன் மூலம் தொடங்கவும்.
- இது இலங்கையிலுள்ள பாலியல் தொழில் தொடர்பான சட்டங்களை பற்றிய ஒரு சிறிய முன்வைப்பு என்பதை விளக்கவும்.
- ஸ்லைடுகளின் உதவியுடன் விரிவுரையை நடத்தவும்.
- பங்கேற்பாளர்களுக்கு கேள்விகளை கேட்பதற்கான ஒரு வாய்ப்பை கொடுக்கவும்.

**குறிப்புக்கள்**
பாலியல் தொழில் என்பது பணத்திற்கு ஈடாக பாலியல் சேவைகளை (அல்லது வேறு ஏதேனும் பொருள் அல்லது நன்மை) வழங்குதலே ஆகும். ஒரு பாலியல் தொழிலாளி என்பவர் பணத்திற்காக பாலியல் சேவைகளை (அல்லது வேறு ஏதேனும் பொருள் அல்லது நன்மை) விருப்பத்துடன் வழங்குகின்ற ஒருவராக இருக்கின்றார். பாலியல் தொழிலாளர்கள் பாலியல் தொழிலையே ஒரு வாழ்வாதாரமாக கொண்டுள்ளனர்.

சில நாடுகளில், பாலியல் தொழில் சட்டபூர்வமானது மற்றும் தொழிலாளர்களுக்கு பொருந்துகின்ற தொழிலாளர் உரிமைகள்தான் பாலியல் தொழிலாளர்களுக்கும் பொருந்துகின்றன. எவ்வாறாயினும், இலங்கையில், அரசியலமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட சட்டபூர்வமான ஒரு தொழிலில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் இருந்தாலும், கட்டுப்படுத்தப்பட்ட சட்டரீதியான சூழல் காரணமாக பாலியல் தொழிலாளர்களுக்கு இந்த பாதுகாப்பு பொருந்தாது.

பாலியல் தொழிலுக்காக கடத்துதலில் அல்லது பாலியல் சுரண்டலில் இருந்து பாலியல் தொழிலானது வேறுபடுத்தப்பட வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பாலியல் தொழிலாளர், தெரிவின் மூலம் பாலியல் சுரண்டலில் ஈடுபடுகின்றார், அதே நேரத்தில் பாலியல் சுரண்டலில், தப்பிப்பிழைக்கின்றவர் பாலியல் செயல்களை செய்வதற்காக கட்டாயப்படுத்தப்படுகின்றார்.

இலங்கையில் பாலியல் தொழில் தொடர்பான கட்டுப்படுத்தப்பட்ட சட்டரீதியான அமைப்பு இருந்தபொழுதிலும், அனைத்து அடிப்படை உரிமைகளும் பாலியல் தொழிலாளர்களுக்கு இன்னும் பொருந்துகின்றன. உதாரணமாக, ஒரு பாலியல் தொழிலாளர் தன்னிச்சையாக கைது செய்யப்படவோ அல்லது சித்திரவதை செய்யப்படவோ முடியாது (அரசியலமைப்பின் பிரிவு 11 மற்றும் 13 ஐ பாருங்கள்). அவர்களுடைய குழந்தைகளுக்கு அரசு பள்ளிகளில் பாகுபாடு காட்டப்பட முடியாது அல்லது பாலியல் தொழிலாளர்களுக்கும் காவல் நிலையம், வைத்தியசாலை அல்லது வேறு அரச நிறுவனங்களில் பாகுபாடு காட்டப்பட முடியாது.

இலங்கையில் பாலியல் தொழில் குற்றமல்ல. அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டமானது பாலியல் தொழிலிலிருந்து ஒரு வாழ்வாதாரத்தை உருவாக்குவது மற்றும் பொதுவில் கேட்பது போன்றவற்றை ஒரு குற்றமாக ஆக்குகின்றது. விபச்சாரவிடுதி கட்டளைச்சட்டம் ஒரு விபச்சாரவிடுதியை பராமரிப்பதை தடை செய்கின்றது. எவ்வாறாயினும், இலங்கையில் அடிக்கடி அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டத்தை பயன்படுத்தி, பாலியல் தொழிலாளர்கள் துன்புறுத்தப்படுகின்றார்கள், காவல்துறையினரால் மிரட்டப்படுகின்றார்கள் மற்றும் எதிராக பாகுபாடு காட்டப்படுகின்றார்கள்.

பின்வருவது இந்த தொடர்புடைய சட்டங்களின் விரிவான ஆய்வாக இருக்கின்றது:

**தண்டனைச்சட்டக்கோவை பிரிவு 360A (1) - 'ஒரு நபரை விபச்சாரியாக ஆக்குதல்'**

"யார் வாங்கினாலும்- வாங்குவதற்கு முயன்றாலும், எந்த வயது ஆணாக அல்லது பெண்ணாக இருந்தாலும் சரி (அத்தகைய நபரின் ஒப்புதலுடனோ அல்லது இல்லாமலோ), இலங்கைக்குள் அல்லது வெளியில், ஒரு விபச்சாரியை; உருவாக்குகின்ற எந்தவொரு நபரும் கொள்முதல் குற்றத்தை செய்கின்றார்."

தண்டனை: 2-10 வருடங்கள் சிறை மற்றும் சிலவேளைகளில் அபராதம்.

## விபச்சாரவிடுதி கட்டளைச்சட்டம்

விபச்சாரவிடுதி கட்டளைச்சட்டம் 1889 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரிவு 2 பின்வருமாறு கூறுகின்றது:
எந்தவொரு நபரும்-

(அ) ஒரு விபச்சார விடுதியை வைத்திருப்பது அல்லது நிர்வகிப்பது அல்லது செயற்படுத்துவது அல்லது உதவுவது; அல்லது

ஆ) குத்தகைக்கு எடுத்தவராக, ஏதாகிலும் வளாகத்தின் குடியிருப்பவராக அல்லது உரிமையாளராக இருந்துகொண்டே, அத்தகைய வளாகத்தை அல்லது அதன் ஏதாவது பகுதியை விபச்சார விடுதியாகவோ அல்லது பழக்கமான விபச்சார தொழிலுக்காகவோ பயன்படுத்துவதற்கு தெரிந்தே

அனுமதிப்பது; அல்லது
(இ) ஏதாகிலும் வளாகத்தின் குத்தகைதாரர் அல்லது நில உரிமையாளர், அல்லது அத்தகைய குத்தகைதாரர் அல்லது நில உரிமையாளரின் முகவராக, அதே அத்தகைய வளாகம் அல்லது அதன் ஒரு பகுதி விபச்சார விடுதியாக பயன்படுத்தப்படுவது என்ற அறிவுடன், அல்லது வேண்டுமென்றே அத்தகைய வளாகம் அல்லது அதன் ஒரு பகுதி விபச்சார விடுதியாக ஒரு குழுவால் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது ஒரு குற்றமாகும்.

**தண்டனை: 0-6 மாத சிறை அல்லது அபராதம்**

இந்த கட்டளைச்சட்டம் 'விபச்சார இல்லம்' என்கின்ற வார்த்தையை விளக்கவில்லை. குசென் vs. சிசிலியா (37 NLR 308) வழக்கில் நீதிபதிகள் ஆண்கள் பெண்களுடன் பாலியல் புணர்வு வைத்துக்கொள்வதற்காகத்தான் தொடர்ந்து அந்த இடத்திற்கு வருகை தருகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும் என்று கூறினார்கள்.
அபேகோன் vs. குலதுங்க வழக்கில், நீதிபதி நாகலிங்கம் ஒரு இடத்தில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் புணர்வு வைத்துக்கொள்வது விபச்சாரவிடுதி கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒரு குற்றமாக நிரூபிப்பதற்கு போதாது என்று கூறினார்.

**<u>அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம்</u>**

**பிரிவு 9 (1) (அ) கூறுகின்றது:**
"தெரிந்தே முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விபச்சார வருமானத்தில் வாழ்கின்ற" எந்தவொரு நபருக்கும்

தண்டனை:
- 0-6 மாதங்கள் சிறை அல்லது அபராதம் (சுருக்க நடைமுறை)
- 0-2 வருடங்கள் சிறை

சைபோ vs. செல்லம் (1923) 25 NLR 251) வழக்கில்
"எமது சட்டத்தின் படி விபச்சாரம் ஒரு குற்றமல்ல... துணைப்பிரிவு தண்டிப்பது என்னவென்றால் "மற்றவர்களின் ஊழல் மற்றும் சீரழிவில் இருந்து ஒரு வாழ்வாதாரத்தை உருவாக்குவதையே" ஆகும். ஒரு விபச்சாரியின் சம்பாத்தியத்தில் வாழ்கின்ற இன்னொரு நபர் மீது குற்றம் சுமத்தப்படுகின்ற பொழுது இது பொருந்தும், ஆனால் விபச்சாரியின் விஷயத்தில் அது அர்த்தமற்றதாக இருக்கும். கட்டளையின் நோக்கம் மற்றும் பிந்தைய துணைப்பிரிவின் வார்த்தைகள் ஆகிய இரண்டின்படி தங்களுடைய சொந்த சம்பாத்தியத்தில் விபச்சாரியாக வாழுகின்ற விபச்சாரிகளுக்கு எந்த பயன்பாடும் இல்லை."

**பிரிவு 3 (1) (b) கூறுகின்றது**:
'பொது தெரு அல்லது நெடுஞ்சாலையில், அல்லது பொது விடுதியில் ஏதாகிலும் இடத்தில் அலைந்து திரிகின்ற, அத்தோடு ஒரு கலவரமாக அல்லது அநாகரீகமாக நடந்து கொள்கின்ற ஒவ்வொரு பொதுவான விபச்சாரியும்' பயனற்ற மற்றும் ஒழுங்கற்ற நபராக கருதப்படுகின்றார்.

தண்டனை:

• இது முதல் தண்டனை என்றால்- 0-14 நாட்கள் சிறை அல்லது ஒரு அபராதம்.
• இரண்டாவது தண்டனை என்றால்- 0-30 நாட்கள் சிறை அல்லது ஒரு அபராதம். [பிரிவு 4 (b)]
• மூன்றாவது தண்டனை என்றால்- 0-4 மாதங்கள் சிறை [பிரிவு 4 (b)]

பெப்ரவரி 2020 இல், ஒரு மஜிஸ்ட்ரேட்/ நீதவான், மேற்கூறிய தீர்ப்பை (சைபோ vs. செல்லம்) மேற்கோள் காட்டி, ஒரு பாலியல் தொழிலாளர் வெறுமனே வணிக ரீதியான புணர்வில் ஈடுபடாமல், "பொது தெருவில் அல்லது நெடுஞ்சாலையில் ஒரு கலவரமாக அல்லது ஒழுங்கற்ற முறையில்" நடந்து கொண்டால் மட்டுமே கட்டளை பிரிவு 3 இன் கீழ் கைதுசெய்யப்பட முடியும் என்று தீர்ப்பளித்தார்.

பாலியல் தொழிலுக்கு தண்டனை விதிக்க முடியாது என்று நீதிமன்ற தீர்ப்புக்கள் இருந்தாலும், இலங்கையில் பாலியல் தொழிலாளர்களை குற்றவாளியாக்குவதற்காக, அலைந்து திரிவோர் கட்டளைச்சட்டம்வழக்கமாக பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக, வன்முறையினால் மற்றும் சுரண்டலினால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய தெரு பாலியல் தொழிலாளர்கள்

**பிரிவு 7 (1) (a) கூறுகின்றது:**

"எந்தவொரு பொது இடத்திலோ அல்லது அதை பற்றிய எந்தவொரு நபரோ சட்டவிரோத பாலியல் புணர்வு அல்லது அநாகரீக செயலுக்காக எந்தவொரு நபரையும் குறிப்பிட்ட நபருடனோ அல்லது வேறு நபருடனோ கோருதல், குறிப்பிட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும்"

தண்டனை:

• 0-14 நாட்கள் சிறை அல்லது அபராதம்
• நடைமுறையில் அபராதம் மட்டுமே வழங்கப்படுகின்றது

பிரிவு 360A, தண்டனைச்சட்டக்கோவை, விபச்சாரவிடுதி கட்டளைச்சட்டம் மற்றும் அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டம் ஆகியவை பாலியல் தொழிலாளர்களான ஆண்களை, பெண்களை அல்லது திருநர்களை தண்டிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது. பாரம்பரியமாக புரிந்து கொள்ளப்பட்ட ஆண் பாலியல் தொழிலாளர்களை தவிர, இலங்கையில் பரிவர்த்தனை புணர்வில் ஈடுபடுகின்ற ‘கடற்கரை சிறுவர்களும்/ பீச் பாய்ஸும்’ ஆண் பாலியல் தொழிலாளர்கள் பிரிவின் கீழ் வருகின்றார்கள்.

CEDAW குழுவானது இலங்கை மீதான தனது இறுதி அவதானிப்புக்களில் (2017) "விபச்சாரத்தில் ஈடுபடுகின்ற பெண்களை அவர்களுடைய உடமைகளில் ஆணுறைகளை வைத்திருப்பதற்கும் விபச்சாரத்தில் ஈடுபடுகின்றதற்கான சான்றாகவும் காவல்துறையினரால் தன்னிச்சையாக கைதுசெய்யப்படுவது, அத்தோடு துன்புறுத்துதல், பாலியல் லஞ்சம் மற்றும் மிரட்டி பணம் பறித்தல் போன்றவற்றில் இந்த பெண்களை உட்படுத்துவது போன்ற" அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டத்தின் பயன்பாடுகளை பற்றி கவலை எழுப்பியது.

"பாலியல் தொழிலாளர்கள் சந்தைப்படுத்துதல், தங்களுடைய குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச்செல்லுதல் போன்ற தினசரி செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற பொழுது சில நேரங்களில் கைது செய்யப்படுவதாகவும், அவர்கள் காவல்துறையினரால் வெறுமனே ஒரு பாலியல் தொழிலாளராக அடையாளம் காணப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

குற்றவியல் நடவடிக்கையின் தொடர்ச்சியான அச்சுறுத்தலை முகங்கொண்டு, இலங்கையிலுள்ள பாலியல் தொழிலாளர்கள் பாதுகாப்பான மற்றும் கண்ணியமான வேலை நிலைமைகளை கோருவது அல்லது சமூக பாதுகாப்பு நன்மைகளை பெறுவது போன்றவற்றை இலங்கையின் தொழிலாளர் கட்டமைப்பிலிருந்து பெற்று பயனடைய முடியாமல் இருக்கின்றார்கள்.

கடந்த காலத்தில் பெண்கள் அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சம்பவங்கள் இருந்தன அத்தோடு அவர்களுடைய பர்ஸில் ஆணுறைகளை வைத்திருந்தது அவர்கள் பொதுவில் புணர்வை கோரினார்கள் என்று கூறுவதற்கு காவல்துறையினருக்கு ஆதாரமாக பயன்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், ஆணுறையொன்றை எடுத்துச்செல்வது இந்த சட்டப்படி ஒரு குற்றமல்ல. ஒரு ஆணுறையானது ஒரு மருத்துவ சாதனமாகும் மற்றும் அதை பாலியல் தொழிலுக்கான ஆதாரமாக பயன்படுத்த முடியாது.

இலங்கையிலுள்ள பாலியல் தொழில் தொடர்பான சட்டங்களை பற்றி மேலும் அறிய இந்த வெளியீட்டை பாருங்கள்: வணிக பாலியல் மற்றும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தடுப்பு தொடர்பான சட்டங்கள் (இலங்கை காவல்துறை, தேசிய எஸ்டிடி/எய்ட்ஸ் கட்டுப்பாட்டு திட்டம் மற்றும் UNFPA)
https://www.aidscontrol.gov.lk/images/pdfs/books/Laws_Concerning_en.pdf

## அமர்வு 06: அடுத்து என்ன நடக்கும்?

*பங்கேற்பாளர்களின் இரண்டு குழுக்களுக்கு இரண்டு வழக்கு ஆய்வுகள் கொடுக்கப்படுகின்றன. அவர்கள் வழக்கு ஆய்வின் படி 5 நிமிட நாடகம் ஒன்றை உருவாக்கி, நடிப்பார்கள். நாடகமானது கொடுக்கப்பட்ட வழக்கு ஆய்வில் என்ன நடக்குமென்று அவர்கள் நினைக்கின்றார்கள் என்பதை அடிப்படையாக கொண்டது. நாடகங்கள் நிகழ்த்தப்பட்டவுடன், பயிற்சி வழங்குநர் இரண்டு ஒத்த கதைகள் அத்தோடு விளைவுகளை பற்றி பகிர்ந்து கொள்கின்றார்.*

### நேரம்

1 மணித்தியாலம்

### இலக்கு குழு

ஒரு அமர்வில் சுமார் 30 பங்கேற்பாளர்கள்

### குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களினால்:

- இலங்கையிலிருந்து இரண்டு முக்கியமான நிகழ்வுகளை விளக்க முடியும்.

### தயாரிப்பு

- ஸ்லைடுகள்
- சூழ்நிலைகளை அச்சிட்டு எடுத்த பிரின்ட் அவுட்கள்

### படிமுறைகள்

- இது சில ஆக்கபூர்வமான நடிப்புக்கான/ நாடகத்திற்கான நேரம் என்பதை விளக்கவும்.
- கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் அடுத்து என்ன நடக்கும் என்பதை நடிப்பதற்காக இரண்டு குழுக்களிலுள்ள (ஒரு குழுவில் 10-15 பங்கேற்பாளர்கள்) பங்கேற்பாளர்களை அழைக்கவும்.
- அவர்கள் சரியான விளைவை அல்லது தவறான விளைவை செயற்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படவில்லை என்பதை விளக்கவும் - வெறுமனே அவர்கள் என்ன நடந்திருக்குமென நினைப்பதை. இது வேடிக்கையாக கூட இருக்கலாம் என்பதை விளக்கவும்.
- நாடகம் சுமார் 5-10 நிமிடங்கள் நீளமானதாக இருக்க வேண்டும் மற்றும் அவர்களுக்கு தயார் செய்வதற்கு 30 நிமிடங்கள் கிடைக்கும் என்பதையும் நினைவில் கொள்ளவும்.
- குழுவிலுள்ள அனைவரும் நடிக்க தேவையில்லை என்பதை பகிர்ந்து கொள்ளவும் – ("நீங்கள் அதை செய்ய நினைத்தால் மட்டுமே") ஒரு நாடகத்தை உருவாக்குவதில் பலர் இருக்கலாம்- நடிகர்கள் மட்டுமல்ல- ஸ்கிரிப்ட் உருவாக்குனர்கள், இயக்குநர்கள், எக்ஸ்ட்ராக்கள் மற்றும் ஒருவர் இந்த பாத்திரங்களில் எதையாவது எடுக்கலாம்.
- ஒரு அணியில் காவல்துறை அதிகாரிகள், ஒரு நீதிபதி - ஒருவேளை ஒருவருக்கொருவர் உடன்படாத 2-3 நீதிபதிகள், குற்றம் சாட்டப்பட்ட நபர் அத்தோடு உண்மையான அல்லது கற்பனை கதாபாத்திரங்களும் இருக்கலாம் என்பதையும் விளக்கவும்.
- கதைக்கு ஒரு ஆரம்பம், ஒரு நடுத்தரம் மற்றும் ஒரு முடிவு இருக்க வேண்டும் என்பதை விளக்கவும்.
- இரண்டு நாடகங்களும் முடிவடைந்தவுடன் ஒவ்வொரு அணிக்கும் ஒரு கைதட்டலை வழங்குங்கள் அத்தோடு பங்கேற்பை பாராட்டவும்.

- சட்ட அமுலாக்கம் மற்றும் நீதி முறைமையினால் பாலியல் தொழிலாளர்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றார்கள் என்பது பற்றி பங்கேற்பாளரின் புரிதல் பற்றிய முக்கியமான விடயங்களை முன்னிலைப்படுத்தவும்.
- நாடகங்களுக்கு பிறகு, உண்மையான வழக்குகள் நீதிமன்றத்திற்கு சென்றபொழுது என்ன நடந்தது என்பதை சுருக்கமாக விளக்கவும்.
- பயிற்சிவழங்குநருக்கான குறிப்பு: வழக்கில் 02 உண்மைகள் நிரூபிக்கப்படவில்லை, ஆனால் அந்த சூழ்நிலையில் வழக்கை மிகவும் பொருத்தமானதாக ஆக்குவதற்கு அவர்கள் வாய்வழியான புணர்வு வைத்துகொண்டதாக அனுமானிக்கப்படுகின்றது.

## குறிப்புக்கள்

**காட்சி 01**

லிபர்டி பிளாசா குடியிருப்புகளில் ரோஸிற்கு 2 குடியிருப்புக்கள் இருக்கின்றன. ஒரு குடியிருப்பு மற்றயதற்கு மேலே உள்ளது. பாலியல் தொழிலாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வசதியான ஒரு இடத்தை வழங்குவதற்காக அவளுக்கு ஒரு பிரகாசமான வணிக யோசனை வருகின்றது, ஆனால் அவள் ஒரு தரகரை வைத்திருப்பாள். காவல்துறையினர் இது குறித்து கேள்விப்பட்டு நிலைமையை சந்தேகிக்கின்றார்கள். அவர்கள் கான்ஸ்டபிள் டக்ளஸிற்கு ஒரு வாடிக்கையாளராக ஆடை அணிவித்து டக்ளஸை சரிபார்ப்பதற்காக அனுப்புகின்றார்கள். டக்ளஸ் முதல் மாடிக்கு செல்கின்றார். ரோஸ் அவரை வரவேற்று சில பெண் பாலியல் தொழிலாளர்களை அழைத்து அவர்களில் ஒருவரை தெரிவு செய்யுமாறு டக்ளஸிடம் கேட்கின்றார். டக்ளஸ் நளினியை தேர்ந்தெடுக்கின்றார் அத்தோடு ரோஸ் ரூ. 3000. ரூபாயை தருமாறு கேட்கின்றார். அவர் ரூ. 3000. ரூபாயை கொடுக்கின்றார். பின்பு நளினி அவருடன் கீழேயுள்ள குடியிருப்புக்கு செல்கின்றார். ரோஸின் குடியிருப்புக்களை சோதனை செய்த டக்ளஸ் காவல்துறையினரை அழைக்கின்றார். வழக்கு நீதிமன்றத்திற்கு செல்கின்றது. அடுத்து என்ன நடக்கும்?

**காட்சி 02**

விஜய் ஒரு காவல்துறை அதிகாரி. ஒரு நாள் வேலை முடிந்த பிறகு, அவர் ஒரு சிறிய மென்பானத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு செல்கின்றார். செல்லும் வழியில், பின் இருக்கையில் ஏறிய லிஹானை விஜய் அழைத்துச்செல்கின்றார். விஜய் சிறிது நேரம் வாகனத்தை செலுத்தி, காரை ஒரு நிறுத்துமிடத்தில் நிறுத்திவிட்டு, லிஹானுடன் பின் இருக்கையில் ஏறுகின்றார். அவர்கள் வாய்வழி புணர்வு வைத்துகொள்கின்றார்கள். பின்னர் லிஹான் காரிலிருந்து இறங்கி நடந்து செல்கின்றார். லிஹான் நம்பியாக இருக்கலாம் என்று அந்த பக்கம் கடந்துசென்ற இரண்டு காவல்துறை அதிகாரிகள் 'உணர்கின்றார்கள்'. வேனை நெருங்கின்ற பொழுது, காவல்துறை அதிகாரிகள் பின் சீட்டில் விஜய் இருப்பதையும், விரைவாக ஆடை அணிவதையும் பார்க்கின்றார்கள். விஜயை வெளியே வருமாறு சொல்கின்றார்கள். 'என்னை எப்படி இவ்வாறு நடத்துகின்றீர்கள்' என்று விஜய் சொல்கின்றார் அத்தோடு அவர்கள் சண்டையிடுகின்றனர். அதிகாரிகள் விஜயை கைதுசெய்கின்றனர். லிஹான் மற்றும் விஜய் வாய்வழி புணர்வு வைத்துகொண்டிருந்ததை பார்த்ததாக ஒரு அறிக்கையை தருமாறு அருகில் ஒரு சிறிய தேநீர் கடையை நடத்துகின்ற ஒரு வயதானவரிடம் காவல்துறை அதிகாரிகள் கேட்கின்றார்கள், மற்றும் இது குறித்து காவல்துறையில் புகார் செய்தவர் அவர்தான். வழக்கு நீதிமன்றத்திற்கு செல்கின்றது. அடுத்து என்ன நடக்கும்?

## வழக்கு 01: ரோஸ்மெரி ஜூடி பெரேரா vs. அரசு

**வழக்கு உண்மைகள்:**
கொழும்பு குற்றப்பிரிவின் (CCD) அதிகாரிகள் பாலியல் புணர்வுக்காக பெண்களுக்கு ஒரு பணத்தொகையை வழங்கியதாக குற்றம்சாட்டப்பட்ட மனுதாரரை கைதுசெய்தனர். கொள்ளுப்பிட்டியிலுள்ள லிபர்டி பிளாசா ஷாப்பிங் காம்பிளாக்ஸின் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் மற்ற 8 பெண்களுடன் அவர் கைதுசெய்யப்பட்டார்.

**உயர் நீதிமன்ற தீர்ப்பு:**
குற்றம்சாட்டப்பட்ட மனுதாரர் மேல் நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்பட்டார் மற்றும் 3 வருட எளிய சிறை மற்றும் ரூ. 25,000 அபராதம் விதிக்கப்பட்டது. ஜீனா மேடம் என்கின்ற ரோஸ்மேரி பெலிசியா பெரேராவின் மீது கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்த தண்டனையை ரத்து செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஒரு பிரிந்த மூன்று-நீதிபதிகள்-உயர் நீதிமன்ற பெஞ்சின் பெரும்பான்மையானவர்கள் ரோஸ்மேரி பெலிசியா பெரேராவை நவம்பர் 9, 2012 திகதியிடப்பட்ட தீர்ப்பின் மூலம் தண்டனைச்சட்டக்கோவை பிரிவு 360A (1) ன் கீழ் 'பணத்தொகை வழங்கிய' குற்றத்திற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலிருந்து விடுவித்தனர்.

**எடுத்துச்செல்லுதல்:** நீதிபதி புவனேகா அலுவிகாரே மற்றும் நீதிபதி எல்.டி.பி. தெஹிதெனியா ஆகியோர் ஏற்கனவே ஒரு பாலியல் தொழிலாளராக இருக்கின்ற ஒரு நபர் மீது கொள்முதல் குற்றம் செய்யப்பட முடியாது என்பதை அவதானித்தனர்.

'பிரிவு 360A (1) ஐ பகுப்பாய்வு செய்கின்ற பொழுது, சட்டத்தின் நலனானது தனிநபரின் கற்பை விட ஒழுக்கத்தில் பொது நலனை பாதுகாப்பதில் இருந்ததாக எனக்கு தோன்றுகின்றது. நோக்கமானது (சட்டமன்றத்தின்) தண்டனை தடைகளை விதிப்பது, இதுவரை விபச்சாரிகளாக ஈடுபடாத நபர்களை தூண்டுவதில் அல்லது கவர்ந்திழுப்பதிலிருந்து விபச்சாரத்தில் விபச்சாரிகளாக சேர்த்துவிடுவது வரை மக்களை ஊக்கப்படுத்தாதது போன்றவையாகும்,' என்று நீதிபதி அலுவிகாரே மேலும் அவதானித்தார்.
http://www.supremecourt.lk/images/documents/sc_appeal_154_2014.pdf

## வழக்கு 02: விமலசிறி vs. பொறுப்பதிகாரி (OIC), காவல் நிலையம், மருதானை, (2016)

**வழக்கு உண்மைகள்:**
ஆரம்பத்தில் விமலசிறி மீதும் மற்றொருவர் (ஆர். ஜெகநாதன்) மீதும் மாளிகாகந்த மஜிஸ்ட்ரேட்/ நீதவான் நீதிமன்றத்தின் முன்பாக மருதானை OIC ஆல் திருத்தப்பட்ட தண்டனைச்சட்டக்கோவையின் 365A பிரிவின் கீழ் பாரிய அநாகரீக செயலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. உடனடி வழக்கில், பாரிய அநாகரீக செயலாக ஒரு வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு வேனுக்குள் (பின் இருக்கையில்) ஒப்புதலுடன் வயது வந்த இரண்டு ஆண்களுக்கு இடையேயான வாய்வழி புணர்வு இருந்தது.( உயர் நீதிமன்றம் (SC) நிர்ணயித்தபடி)

குற்றம் சாட்டப்பட்ட தரப்பினரை குற்றவாளிகள் என்று தீர்ப்பளித்த விசாரணை மஜிஸ்ட்ரேட்/ நீதவான், இருவரையும் குற்றவாளி என்று தீர்ப்பளித்து, சிறைதண்டனையும் (ஒரு வருடம் மற்றும் 6 மாதங்கள் இயல்புநிலை தண்டனை) அத்தோடு ஒரு அபராதமும் (ரூ 1,500) விதித்தார்.

**உயர் நீதிமன்ற மேன்முறையீட்டில்:**
பிரிவு 365A இலுள்ள குற்றம் குறித்து, நீதிபதி அழுவிஹாரே "இங்கிலாந்தில் சட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த மற்றும் பொது ஒழுக்கத்தை அடிப்படையாகக்கொண்ட சோடோமி மற்றும் முட்டாள்தனமான குற்றங்களை இது கையாள்கின்றது" என்று விளக்கம் அளித்தார். பாலியல் குற்றவியல் சட்டம் இப்போது இங்கிலாந்தில் குற்றம் அல்லாத ஒன்றான, 2004 ஆம் ஆண்டில் மோசமான அநாகரிக மற்றும் முட்டாள்தனமான பாலியல் குற்றங்களை ரத்து செய்தது. வயதுவந்தவர்களுக்கிடையிலான ஒருமித்த புணர்வானது அரசால் கட்டுப்படுத்தப்படக்கூடாது அல்லது குற்றமயமாக்கலுக்கான அடிப்படையாகவும் இருக்கக்கூடாது என்கின்ற சமகால சிந்தனையானது பல ஆண்டுகளாக அபிவிருத்தியடைந்திருப்பதாக தோன்றுகின்றது மற்றும் இங்கிலாந்தில் அநாகரிக மற்றும் முட்டாள்தனமான குற்றத்தை ரத்து செய்வதற்கு வழிவகுத்த காரணியாக இருக்கலாம்" , " எவ்வாறாயினும் குற்றமானது நமது சட்டத்தின் ஒரு பகுதியாகவே உள்ளது".

உடனடி வழக்குக்கு திரும்புகின்றபொழுது, மேல் நீதிமன்ற நீதிபதியால் உறுதி செய்யப்பட்ட மஜிஸ்ட்ரேட்/ நீதவானின் தண்டனையை நீதிபதி அழுவிஹாரே உறுதிசெய்தாலும், விமலசிறி மற்றும் பிற குற்றவாளிகளுக்கு முன்பு ஏதாகிலும் தண்டனை அல்லது குற்றவியல் வரலாறு இல்லாததால், "சிறைதண்டனையின் ஒரு காவலலிருந்த காலமானது சட்டம் ஒருமித்ததாக இருந்தது என்கிற உண்மையை கருத்திற்கொண்டு, குற்றத்திற்கேற்ப இணக்கமாக இருக்கவில்லை", ஆகவே அது நியாயமற்றது. உயர் நீதிமன்றம் இவ்வாறு "ஒரு வருட சிறைதண்டனையை ஒதுக்கி வைத்து, அதற்கு பதிலாக இரண்டு வருடங்கள் கடுங்காவல் தண்டனையை மாற்றியது" அத்தோடு "மஜிஸ்ட்ரேட்/ நீதவானால் தண்டனை அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து சிறைதண்டனை காலத்தை ஐந்து வருட காலத்திற்கு நிறுத்தி வைத்தது." வழக்கை முடிவு செய்கின்ற பொழுது, சம்பவம் நடந்து 13 வருடங்கள் ஆகிவிட்டிருந்தன. பின்னர் விமலசிறியின் மேன்முறையீட்டை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

**எடுத்துச்செல்லுதல்:**
நீதிபதி அலுவிஹாரே இன் முன்னோக்கு அவதானிப்பானது "வயதுவந்தவர்களுக்கிடையிலான ஒருமித்த புணர்வானது அரசால் கட்டுப்படுத்தப்படக்கூடாது அல்லது குற்றமயமாக்கலுக்கான அடிப்படையாகவும் இருக்கக்கூடாது என்கின்ற சமகால சிந்தனையானது பல ஆண்டுகளாக அபிவிருத்தியடைந்திருப்பதாக தோன்றுகின்றது மற்றும் இங்கிலாந்தில் மொத்த அநாகரிக மற்றும் முட்டாள்தனமான குற்றத்தை ரத்து செய்வதற்கு வழிவகுத்த காரணியாக இருக்கலாம்" ஆக இருக்கின்றது.

விமலசிறிக்காக ஆஜரான சாலிய பீரிஸ் பிசி, உயர் நீதிமன்றத்தால் (SC) சட்டங்களை முடக்க முடியாவிட்டாலும், இங்கிலாந்தில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களை நீதிப அலுவிஹாரேவின் அவதானிப்பின் படி - கேள்விக்குரிய செயலானது ஒப்புதலுடன் வயதுக்கு வந்தவர்களுக்கு இடையில் இருக்கும் வரை குற்றம் அல்ல - இது சம்பந்தமாக சரியாக எடுக்கப்பட வேண்டிய திசையை சுட்டிக்காட்டுகின்றது என்று கூறினார்.

ஆதாரமாக வோல்பென்டன் அறிக்கை என்று அழைக்கப்படுகின்ற ஓரினச்சேர்க்கை குற்றங்கள் மற்றும் விபச்சாரம் தொடர்பான துறை குழுவின் அறிக்கையை மேற்கோள் காட்டி, இது பொது ஒழுங்கை பாதிக்கவில்லையென்றால் அல்லது மக்களுக்கு தீங்கு விளைவிக்காவிட்டால் அரசு தலையிடக்கூடாது என்று அவர் சுட்டிக்காட்டினார். "குடிமக்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் தலையிடுவது அல்லது ஏதாகிலும் குறிப்பிட்ட நடத்தை முறையை அமுல்படுத்துவது போன்றவை சட்டத்தின் செயற்பாடு அல்ல" என்பதிலிருந்து, "தனிப்பட்ட ரீதியில் ஒப்புதலுடன் வயதுக்கு வந்தவர்களுக்கு இடையிலான ஓரினச்சேர்க்கை நடத்தையானது இனி குற்றவியல் குற்றமாக இருக்கக்கூடாது" என்பதையும் அந்த அறிக்கை பரிந்துரைத்தது. பீரிஸ் PC, பிரிவு 365 இல் கூறப்பட்டுள்ளபடி "இயற்கையின் ஒழுங்குக்கு மாறான" என்றால் என்ன என்பதை அறிவியல் பூர்வமாக நிறுவ முடியுமா என்ற வாதத்தையும் முன்வைத்தார். "இயற்கையின் ஒழுங்குக்கு மாறான" என்கின்ற ஒரு தவறான தார்மீக முன்கணிப்பு சம்பந்தப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டபொழுது, "தனிநபர்கள் வெவ்வேறு பாலீர்ப்பு கொண்டவர்கள்" என்று அவர் ஒப்புக்கொண்டார்.

**முழு வழக்கையும் பார்க்க:**
http://www.supremecourt.lk/images/documents/sc_appeal_32_11.pdf'

பல தன்பாலீர்ப்புள்ள ஆண்கள், இருபாலினத்தவர்கள் மற்றும் திருநர்கள் இந்த சட்டங்களை பயன்படுத்தி மிரட்டப்பட்டு, கைது செய்யப்பட்டு, மிரட்டி பணம் பறிப்பதற்கு உட்படுத்தப்படுகின்றார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மிரட்டல் அல்லது பணம் பறிப்பதற்கான மிரட்டலை எதிர்கொள்கின்ற தனிநபர்கள் நீதியை தேடுவது மிகவும் அரிதாக இருக்கின்றது. இந்த சட்டங்களின் கீழ் காவல்துறையினர் மக்களை கைதுசெய்து அவர்களை விடுவிப்பதற்காக பாலியல் சேவைகள், பணம் அல்லது பிற மதிப்புமிக்க பொருட்களை வழங்கும்படி கட்டாயப்படுத்திய சம்பவங்கள் இருக்கின்றன. பாலியல் தொழிலாளர்களின் மற்றும் தன்பாலீர்ப்பு பெண்களின் விடயத்தில், கைதுசெய்யப்பட்டவர்களை காவல்துறை அதிகாரிகளுக்கு முன்னால் பாடுமாறு, நடனமாடுமாறு அல்லது ஆடைகளை அகற்றுமாறு காவல்துறையினர் கேட்டுள்ள சம்பவங்கள் இருக்கின்றன. சில வழக்குகளில், கைதுசெய்யப்பட்டவர்கள் கடுமையாக தாக்கப்படுகின்றனர். காவல்துறையின் காவலில் இருக்கின்ற பொழுது இந்த வகையான வன்முறையானது சித்திரவதையிலிருந்து சுதந்திரம் என்ற இலங்கையின் அடிப்படை உரிமைக்கு சமமானதாகும். எவ்வாறாயினும், அநேகமான வழக்குகளில், வன்முறை அறிவிக்கப்படாமலே போகின்றது மற்றும் குற்றவாளிகள் விடுவிக்கப்படுகின்றார்கள்.

## அமர்வு 07: கைது தொடர்பான சட்டங்களும் நடைமுறைகளும்

*இது ஸ்லைடுகளின் மூலம் உதவுகின்ற ஒரு சுருக்கமான விரிவுரையாக இருக்கின்றது.*

### நேரம்

30 நிமிடங்கள்

### இலக்கு குழு

ஒரு அமர்வில் சுமார் 30 பங்கேற்பாளர்கள்

### குறிக்கோள்கள்

இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களினால்:

- இலங்கையின் கைது பற்றிய சில சட்டங்களை கூற முடியும்.

### தயாரிப்பு

- ஸ்லைடுகள்

### படிமுறைகள்

- இது இலங்கையிலுள்ள கைது தொடர்பான சட்டங்கள் பற்றிய ஒரு சிறிய விளக்கக்காட்சி என்பதை விளக்கவும்.
- ஸ்லைடுகளின் உதவியுடன் விரிவுரையை நடத்தவும்.
- பங்கேற்பாளர்களுக்கு கேள்விகளை கேட்க ஒரு வாய்ப்பை வழங்கவும்.

### குறிப்புக்கள்

அலைந்துதிரிவோர் கட்டளைச்சட்டத்தின் கீழ், காவல்துறை அதிகாரி ஒருவர் ஒரு உத்தரவு இல்லாமல் ஒரு நபரை கைதுசெய்ய முடியும் என்று மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் ந நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையானது ஒரு உத்தரவு இல்லாமல் ஒரு நபரை கைது செய்வதற்கு அனுமதிக்கின்றது.

எவ்வாறாயினும், அத்தகைய நபர் ஒரு உத்தரவு இல்லாமல் கைதுசெய்யப்பட்டால் கைது செய்யப்பட்ட நபருக்கு சில பாதுகாப்புக்கள் வழங்கப்படுகின்றன.

1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை பிரிவு 37 இல், இது பின்வருமாறு வழங்கப்படுகின்றது:

பி - ஒரு உத்தரவு இல்லாமல் கைது

- பிரிவு 37: ‘கைது செய்யப்பட்ட நபரை இருபத்து நான்கு மணி நேரத்திற்கு மேல் தடுத்து வைக்கக்கூடாது’
- "எந்தவொரு சமாதான அதிகாரியும் வழக்கின் அனைத்து சூழ்நிலைகளிலும் நியாயமானதாக இருப்பதை விட ஒரு நீண்ட காலத்திற்கு ஒரு உத்தரவு இல்லாமல் கைதுசெய்யப்பட்ட ஒரு நபரை காவலில் வைக்கவோ அல்லது சிறையில் அடைக்கவோ கூடாது, அத்தோடு கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நீதவானுக்கான பயணத்திற்கு தேவையான நேரத்திற்கு அப்பால், அத்தகைய காலம் இருபத்து நான்கு மணி நேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்."

**1866 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க காவல்துறை கட்டளைச்சட்டம்**

காவல்துறை கட்டளைச்சட்டம் பின்வருமாறு கூறுகின்றது:

- பிரிவு 65: 'உத்தரவு இல்லாமல் கைது செய்யப்பட்ட நபர்களை நீதவான் முன்பாக ஆஜர்படுத்தும் வரை அல்லது பிணை பெறும் வரை காவல் நிலையத்திற்கு அழைத்துச்செல்ல வேண்டும்'

- "உத்தரவு இல்லாமல் எந்தவொரு காவல்துறை அதிகாரியாலும் காவலில் எடுத்துக்கொள்ளப்படும் ஒவ்வொரு நபரும் (அவர்களின் பெயர் மற்றும் குடியிருப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்திற்காக தடுத்து வைக்கப்பட்ட நபர்கள் தவிர) உடனடியாக அத்தகைய நபர் சட்டப்படி கையாளப்படுவதற்கு ஒரு நீதவான் முன்பாக ஆஜர்படுத்தப்படும் வரை, அல்லது ஒரு நீதவான் முன்பாக ஆஜராகி பிணை கொடுக்கின்ற வரை பாதுகாக்கப்படுவதற்காக ஒரு நிலையத்தின் பொறுப்பதிகாரியின் பொறுப்பில் ஒப்படைக்கப்படுவார், பொறுப்பதிகாரி இதில் குறிப்பிடப்பட்ட படி பிணை வழங்குவது புத்திசாதுரியமானது இல்லை எனக்கருத்தினால் பின்வருமாறு செய்யப்பட வேண்டும்: பிணை அங்கீகரிக்கப்படவில்லை எனில் அந்தக் கைதி 24 மணித்தியாலங்களுக்குள் நீதவானின் முன் ஆஜர் படுத்தப்பட வேண்டும், சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் ஏற்படும் தடைகளை தவிர வேறு ஒரு நேரத்திலும் இது தாமதிக்கப்படக்கூடாது."

ஒரு உத்தரவு இல்லாமல் கைதுசெய்யப்படுகின்ற வழக்குகளில் சட்டமானது இந்த பாதுகாப்புக்களை வழங்கினாலும், நடைமுறையில் ஒதுக்கப்பட்ட சமூகங்கள் இலக்குக்கு/ நடைமுறை முறைகேடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன.

முந்தைய அமர்வில் விளக்கப்பட்டுள்ளபடி, இலங்கையில் கைதுசெய்யப்பட்ட எந்தவொரு நபருக்கும் பின்வரும் பாதுகாப்புக்கள் இருக்கின்றன:

1. அரசியலமைப்பின் 13 வது உறுப்புரையின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட எதேச்சதிகார கைது, தடுப்பு மற்றும் தண்டனை ஆகியவற்றிலிருந்து சுதந்திரம்

இந்த உறுப்புரையின் கீழ் உள்ளடங்குகின்ற சில ஏற்பாடுகள்:

- சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறைக்கு இணங்க என்பதைத்தவிர எந்த நபரையும் கைதுசெய்ய முடியாது.
- கைதுசெய்யப்பட்ட எந்தவொரு நபரும் தன்னுடைய கைதிற்கான காரணத்தை அறிய வேண்டும்.
- காவலில் வைக்கப்பட்டுள்ள, தடுத்துவைக்கப்பட்ட அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தை இழந்த ஒவ்வொரு நபரும் சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறையின் படி அருகிலுள்ள தகுந்த நீதிமன்றத்தின் நீதிபதியின் முன்பாக கொண்டுவரப்படுவார்கள் அத்தோடு காவலில் வைக்கப்படவோ, தடுத்து வைக்கவோ அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தை இழக்கவோ கூடாது, அத்தகைய நீதிபதியின் உத்தரவின் விதிமுறைகள் சட்டத்தால் நிறுவப்பட்ட

நடைமுறைக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகின்றன.

- ஒரு குற்றம் சுமத்தப்பட்ட எந்தவொரு நபரும் ஒரு தகுந்த நீதிமன்றத்தின் ஒரு நியாயமான விசாரணையில் நேரில் அல்லது ஒரு வழக்கறிஞரால் கேட்கப்படுவதற்கு உரிமையுண்டு.

2. அரசியலமைப்பின் உறுப்புரை 11 இன் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்ட சித்திரவதையிலிருந்து சுதந்திரம்
   இதன் பொருளானது, எந்தவொரு கொடும் வலியையும்- உடல் ரீதியாகவோ அல்லது மன ரீதியாகவோ- ஒரு நபர் காவலில் இருக்கின்றபொழுது தூண்டப்பட முடியாது, உதாரணமாக ஏதேனும் தகவல் அல்லது வாக்குமூலம் பெறுவதற்கு. அடித்தல், உணவு அல்லது தண்ணீர் கொடுக்காமல் இருத்தல், அல்லது மன உளைச்சலை தூண்டுதல் ஆகியவை உள்ளடங்குகின்றன.

1994 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க சித்திரவதைக்கு எதிரான சமவாயம் அத்தோடு ஏனைய கொடூரமான மனிதாபிமானமற்ற அல்லது கீழ்த்தரமான சிகிச்சை அல்லது தண்டனைச்சட்டமானது சித்திரவதை செய்கின்ற குற்றவாளியான எந்தவொரு நபருக்கும் ஒரு 7-10 வருடங்கள் சிறைதண்டனை விதிக்கின்ற சித்திரவதையை கையாள்கின்றது.

## முடிவு

சித்திரவதையிலிருந்து சுதந்திரத்தை அடைவது பற்றி உருவாக்கப்பட்ட இரண்டு வீடியோக்களை காட்டுவதன் மூலம் இந்த அமர்வை முடிவுக்கு கொண்டுவாருங்கள். வீடியோக்கள் கீழ்வரும் இணைப்பில் காணப்படுகின்றன:

இணைப்பு இங்கே

## அமர்வு 08: உடன்படுகின்றீர்களா அல்லது உடன்படவில்லையா?

*பங்கேற்பாளர்கள் வழங்கப்பட்ட ஒரு கூற்றுடன் உடன்படுகின்றார்களா அல்லது உடன்படவில்லையா என்பதை பிரதிபலிக்கின்ற மற்றும் முடிவுசெய்வதற்கான வாய்ப்பை பெறுகின்றார்கள். உடன்படுகின்றவர்கள் மற்றும் உடன்படாதவர்கள் ஒருவருக்கொருவர் பதிலளிக்கின்ற வாய்ப்பை பெறுகின்றார்கள்.*

### நேரம்
30 நிமிடங்கள்

### இலக்கு குழு
ஒரு அமர்வில் சுமார் 30 பங்கேற்பாளர்கள்

### குறிக்கோள்கள்
இந்த அமர்வின் முடிவில், பங்கேற்பாளர்களினால்:
- நினைவூட்டக்கூடிய அணுகுமுறைகள், மதிப்புக்கள் மற்றும் தவறான எண்ணங்களை ஆராய முடியும்.
- அவர்களுடைய சொந்த பக்கச்சார்புகளை கேள்விகேட்க முடியும்.
- மாறுபட்ட SOGIESC உடைய மக்களுக்காக சமத்துவத்திற்கு எதிரான வாதங்களை எழுப்ப முடியும்.

### தேவையான கருவிகள்
- பெயின்டர் டேப்

### தயாரிப்பு
- பெயின்டர்களின் டேப் மூலம் அறை/ வட்டத்தின் நடுத்தர கோட்டை குறியுங்கள்.
- கோட்டின் இருபுறமும் 'ஆம்' மற்றும் 'இல்லை' என்று குறியுங்கள்.

### படிமுறைகள்
- இந்த இறுதியில் நீங்கள் சில கூற்றுக்களை பார்ப்பீர்கள் என்பதை விளக்கவும், அத்தோடு பங்கேற்பாளர்கள் அவர்கள் உடன்படுகின்றார்களா அல்லது உடன்படவில்லையா என்பதை முடிவுசெய்ய வேண்டும். பங்கேற்பாளர்கள் கூற்றுடன் உடன்படுகின்றார்களா அல்லது உடன்படவில்லையா என்பதை பொறுத்து அறையின் 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பக்கத்திற்கு நகர சொல்லவும்.

- கீழே உள்ள குறிப்புக்கள் பிரிவில் காணப்படுகின்ற கூற்றுக்களை படித்து, பங்கேற்பாளர்கள் தங்களை நகர்த்துவதற்கு அனுமதிக்கவும். ஒரு பக்கத்தில் எந்தவொரு பங்கேற்பாளர்களும் இல்லையென்றால், ஒரு சமமான கலந்துரையாடலை உறுதிசெய்ய பங்கேற்பாளர்களை அந்தப்பக்கம் நகர்த்துவதற்கு ஊக்குவிக்கவும். 2-3 பங்கேற்பாளர்களை உடன்பட்டதற்காக அல்லது உடன்படாததற்கான அவர்களுடைய காரணங்களை விளக்குமாறு கேட்கவும். ஒவ்வொரு பதிலுக்கும் பிறகு, மற்ற பக்கத்திலிருந்து ஒருவரை பதிலளிப்பதற்கு அனுமதிக்கவும். இரண்டு பக்கங்களிலிருந்தும் சரியான வாதங்களை ஊக்குவிக்கவும்.
- செயற்பாட்டின் பொழுது, எதிர்மறையான அணுகுமுறைகள், மதிப்புக்கள் மற்றும் பக்கச்சார்புகளால் கலந்துரையாடலானது பெரிதும் ஆதிக்கம் செலுத்தப்படாவிட்டால் நடுநிலையாக இருக்கவும். அவ்வாறான நிலையில், ஒவ்வொரு கூற்றின் கீழும் கலந்துரையாடலை முடிப்பதற்கு கீழே உள்ள குறிப்புக்கள் பிரிவில் காணப்படுகின்ற வாதங்களை நீங்கள் பயன்படுத்தலாம்.

# குறிப்புக்கள்

| கூற்றுக்கள் | வாதங்கள் |
|---|---|
| எல்ஜிபிடி+ மக்கள் தொடர்பாக இலங்கையில் சட்டங்களை மாற்ற முயற்சிப்பது நேரத்தை வீணடிப்பதாகும், ஏனெனில் அது ஒருபொழுதும் நடக்காது. | சட்ட சீர்திருத்தங்களை கொண்டுவருகின்ற செயன்முறையானது ஒரு நீண்டகால அர்ப்பணிப்பு ஆகும். இதற்கு ஒரு நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியான முயற்சிகள் தேவையாக இருக்கின்றன. சமூகங்களின் அணிதிரட்டு மற்றும் சமூக விழிப்புணர்வை அதிகரிப்பது போன்றவை இந்த செயன்முறைக்கு பங்களிக்கின்றது. |
| பாலியல் தொழில் குற்றமற்றதாக இருக்க வேண்டும் | பாலியல் தொழிலை குற்றமாக்குவது விக்டோரியன் ஒழுக்கத்தின் ஒரு பிரதிபலிப்பாக இருக்கின்றது. பாலியல் தொழிலாளர்கள் தங்களுடைய தொழிலில் விருப்பத்துடன்தான் ஈடுபடுகின்றனர். தற்போதுள்ள சட்டங்கள் பாலியல் தொழிலாளர்களை துன்புறுத்துவதற்கு வழிவகுக்கின்றன. பாலியல் தொழிலை குற்றமற்றதாக்குவது, உழைப்பு தொடர்பான உரிமைகள் உட்பட தங்களுடைய மனித உரிமைகளை பாலியல் தொழிலாளர்கள் உணர்ந்துகொள்வதற்கு அனுமதிக்கின்றது. |
| 'இயற்கையின் நியதிக்கு மாறான குற்றங்கள்' மற்றும் 'தனிநபர்களுக்கு இடையேயான அநாகரீக செயல்கள்' குற்றமாக்குகின்ற தண்டனைச்சட்டத்தின் 365 மற்றும் 365A பிரிவுகள் மாற்றப்பட வேண்டியதில்லை, ஏனெனில் அவை அரிதாகவே பயன்படுத்தப்படுகின்றன. | இந்த சட்டங்கள் தொடர்ந்தும் எல்ஜிபிடி+ மக்களை ஒதுக்குகின்றன, அத்தோடு அன்றாட வாழ்க்கையையும் பாதிக்கின்றது. எல்ஜிபிடி+ மக்களும் இந்த சட்டத்தால் புறக்கணிக்கப்படுகின்றார்கள். ஒப்புதலுடன் வயதுவந்தவர்களுக்கு இடையிலான நெருக்கமான விவகாரங்களில் அரசு தலையிடக்கூடாது. இந்த சட்டத்தின் அரிய பயன்பாடு இருந்தாலும், இது எல்ஜிபிடி+ மக்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுகின்றது மற்றும் சமத்துவத்திற்கான அவர்களுடைய உரிமையை மீறுகின்றது. |
| 365 மற்றும் 365A பிரிவுகளை ரத்து செய்தல் - அது பிள்ளைகளின்/ குழந்தைகளின் அதிகரித்த பாதிப்புக்கு வழிவகுக்கின்ற 'இயற்கையின் நியதிக்கு மாறான குற்றங்கள்' மற்றும் 'நபர்களுக்கு இடையிலான அநாகரீக செயல்கள்' ஆக இருக்கின்றது. | குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான பல்வேறுபட்ட சட்டங்களின் கீழ் குழந்தைகள் பாதுகாக்கப்படுகின்றார்கள். இந்த சட்டங்கள் வயதுக்குவந்தவர்களான ஒப்புதலுடனான ஒரே பாலின இணையர்களுக்கு இடையிலான பாலியல் செயற்பாட்டோடு தொடர்புபட்டதாக இருக்கின்றது. |
| எந்தவொரு நபரும் பாலியல் வன்புணர்வு செய்யப்படுகின்ற வழக்குகளில் - அவர்களுடைய பாலினத்தை பொருட்படுத்தாமல் 'பாலியல் வன்புணர்வு' சட்டமானது பொருந்துகின்றது. | இது ஒரு சரியான பரிந்துரையாகும், ஏனெனில் பாலின சமத்துவம் என்பது பாலினத்தை பொருட்படுத்தாமல் அனைத்து மக்களும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதாகும். ஆண்கள் மற்றும் திருநர்கள் மீதான பாலியல் வன்புணர்வு ஏன் சட்டத்தில் 'பாலியல் வன்புணர்வு' என்று அழைக்கப்படுவதில்லை என்பதற்கு எந்த காரணமும் இல்லை. பாலியல் வன்புணர்வு தொடர்பான தற்போதுள்ள சட்டமானது பாலின இருமையை வலுப்படுத்துகின்றது. |
| பாலினத்தை மாற்றுவது பாலின சுயஅங்கீகாரத்தின் அடிப்படையில் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றது. உளவியல் மதிப்பீடுகள் தேவையற்றவை. | பாலின அடையாளம் என்பது சுயவிழிப்புணர்வின் பகுதியாகும், ஆகவே ஒருவரின் சொந்த புரிதல் போதுமானதாக இருக்க வேண்டும். ஒரு உளவியல் மதிப்பீடு தேவை என்பது நெறிமுறை அல்லாத பாலின அடையாளங்களை நோய்க்குறியாக்குகின்ற ஒரு முன்மாதிரியாகும். |
| சிலநேரங்களில் தகவலை பெறுவதற்காக ஒரு சந்தேக நபரை பொலிஸ் காவலில் வைத்து அடிப்பது சரியானது. | தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சித்திரவதையை குற்றமாக்குகின்றன. இந்த சட்டமானது அதிகார துஷ்பிரயோகத்திலிருந்து மக்களை பாதுகாப்பதற்காக இருக்கின்றது. |
| தன்பாலீர்ப்பு பெண் இணையருக்கு குழந்தைகளை தத்தெடுப்பது அனுமதிக்கப்பட வேண்டும், ஆனால் தன்பாலீர்ப்பு ஆண் இணையருக்கு அல்ல. | தத்தெடுப்பானது அவர்களுடைய பாலினத்தை பொருட்படுத்தாமல் அனைத்து வருங்கால பெற்றோர்களுக்கும் கிடைக்கச்செய்யப்பட வேண்டும். ஆண்களை விலக்குகின்ற ஒரு கொள்கையானது பாரபட்சமானது. |
| ஒரு பாலின அங்கீகார சான்றிதழை பெறுவதற்கு பாலியல் மாற்று அறுவை சிகிச்சை அவசியமானது. | பாலின அடையாளமானது பாலியல் உறுப்புக்களை விட அதிகம் தொடர்புடையது. பாலியல் மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை என்பது சில திருநர்களும் விலகிக்கொள்ள விரும்புகின்ற ஒரு சிக்கலான செயன்முறையாகும். அது அவர்களுடைய உண்மையான பாலினத்தை மறுப்பதற்கு ஒரு காரணமாக இருக்கக்கூடாது. |
| ஒரு கணவன் மற்றும் மனைவி திருமணமாகி, மனைவிக்கு புணர்வு வைத்துக்கொள்வதற்கு விருப்பமில்லை ஆனால் கணவன் மேலே தொடர்ந்து போனால், அது பாலியல் வன்புணர்வாக கருதப்பட வேண்டும். | புணர்வில் இருந்து பாலியல் வன்முறையை வேறுபடுத்துகின்ற காரணியாக ஒப்புதலின்மை இருக்கின்றது. ஒப்புதல் இல்லாவிட்டால், அது பாலியல் வன்புணர்வாகவே கருதப்பட வேண்டும். |

BRIDGE to EQUALITY
සමානාත්මතාවය සොයා...
சமத்துவத்தை தேடுதல்...

BRIDGE to Equality (சமத்துவத்தை தேடுதல்) என்பது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தினூடாக இலங்கையில் உள்ள LGBTQ மக்களுக்கான மனித உரிமைகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட ஒரு திட்டமாகும். LGBTQ சமூகத்திற்கான நீதி விளைவுகளை மேம்படுத்த நீதித்துறை செயற்பாட்டாளர்கள் (நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் பிற சட்ட வல்லுநர்கள்), ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமைகள் பாதுகாவலர்களை செயல்படுத்துவதனூடாக் தற்போதைய சட்டக் கட்டமைப்பால் சுமத்தப்படும் சவால்களை சமாளிப்பதுடன், LGBTQ மக்களின் மனித உரிமைகளின் ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் பாதுகாப்பில் கவனம் செலுத்துகிறது.

BRIDGE to Equality (சமத்துவத்தை தேடுதல்) எனும் இந்த செயற்திட்டமானது DAST, தேசிய திருநர் வலையமைப்பு (NTN) மற்றும் யங் அவுட் ஹியர் (YOH) ஆகிய அமைப்புகளின் கூட்டாக 2021 முதல் சர்வதேச சட்டவல்லுனரகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது.

facebook.com/BridgetoEquality
instagram.com/bridgetoequality2021
twitter.com/B2ECampaign
bridgetoequalitycampaign@protonmail.com